82

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

27 NOV 1952

பெற்றோர்களே!

கண்ணன் ஆரம்பித்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரையில் தாங்கள் தங்கள் குழந்தையைப் போலவே கண்ணனிடம் அன்பு பாராட்டி, ஆதரித்து வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

குழந்தைகள் தங்களுக்கென்று வெளியாகும் எதையும் ஆவலுடன் வாங்கிப் படித்து விடுவார்கள். அவற்றில் எவை சிறந்தவை, எவை தீமையற்றவை என்றெல்லாம் பார்க்கமாட்டார்கள். அவர்கள் கைக்கு எது கிடைக்கிறதோ அதை வாங்கிவிடுவார்கள்.

இந்த அபாயம் உள்ள துறையில் கண்ணன் தன் சிறப்பான தொண்டைச் செய்ய வேண்டியிருக்கிறது. குழந்தைகளை விரும்பிப் படிக்கும்படி செய்யவும் அந்த விஷயங்கள் ருசியுடன் பயனுள்ளவையாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்வதுமே எங்கள் பொறுப்பு. விஞ்ஞான விந்தைகளை அவர்கள் மனம் அலுக்காமல் தெரிந்து கொள்ளும்படி சித்திர விளக்கத்துடன் வெளியிடுகிறோம். நம் நாட்டிலுள்ள பல முக்கிய ஊர்களைப் பற்றியும், பெரியோர்களைப் பற்றியும் பட்சிஜாதிகளைப் பற்றியும், குழந்தைகளே தெரிந்து கொள்ளும்படியும் எழுதும்படியும் ஊக்குவிக்கிறோம். குழந்தைகளுடைய உலகம் விரிவடைவதற்கான முறையில் கண்ணன் கழகத்தை ஆரம்பித்து நடத்துகிறோம். அவர்களுடைய கற்பனையைத் தூண்டுகின்ற கதைகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் வெளியிடுகிறோம்.

இளம் மனத்தைக் கெடுக்கக் கூடிய முறையில் விஷயங்களை வெளியிடுவதில்லை. “அமெரிக்காவில் சிறுவர்களுக்கென நடத்தப்படும் பத்திரிகைகளில் பல, சிறுவர்கள் மனத்தைத் தீமையில் செலுத்துவனவாக இருக்கின்றன. வீரம் வீரம் என்று சொல்லிக் கொண்டு குற்றச் செயலையும் திருட்டு எத்துக்களையும் சொல்லிக் கொடுக்கின்றன. வாழ்க்கையில் இல்லாத துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்யத் தூண்டுகின்றன” என்று ஹிந்துவில் வெளியான கட்டுரையைச் சமீபத்தில் படித்திருப்பீர்கள். வாழ்க்கையை ஒட்டிய முறையிலும் மனித இயல்புக்கு ஏற்ற வகையிலும் வருங்கால சந்ததியார்களை உருவாக்குவதே கண்ணனின் நோக்கம்.

கல்விமான்களும், ஆசிரியர்களும், பெரியோர்களும், குழந்தைகளுக்கு என்று கண்ணனில் எழுதுகிறார்கள். உங்கள் குழந்தைகளு[ம்] அவர்கள் பிஞ்சு உள்ளத்தில் எழும் கற்பனைகளை எழுத்தில் எழுதி[ப்] பழகுகிறார்கள். பெற்றோர்களுக்கான பெரும் பொறுப்பைக் கண்ணன் பகிர்ந்து கொள்கிறது. நீங்கள் அவர்கள் சிறந்தவற்றையே படிக்கும்படி ஆரம்பித்து வைத்துவிட்டால் பிறகு தானாகவே அவர்களுக்கு உயர்ந்தது எது, தாழ்ந்தது எது என்று தெரிந்துவிடும். கண்ணன் குழந்தைகளுக்கு நல்ல ருசியும் பகுத்தறியும் திறமையும் வளர்ந்து வரும்படி பார்த்துக் கொள்கிறது. ஆகவே, உங்கள் ஆதரவுக்கு[ம்] நம்பிக்கைக்கும் இன்றுபோல் என்றும் கண்ணன் பாத்திரமாக இரு[க்]கும் என்று உறுதி கூறுகிறோம்.

— ஆசிரிய[ர்]

27 NOV 952

பொருளடக்கம்

மலர்: 3 இதழ்: 8 (10)

ஆகஸ்ட் '52

குழந்தைகளே !	பக்கம் ..	2
அபாயச் சங்கு - 'நீலம்'	.. .. ..	8
மதுரையில் கூட்டம் - (படங்கள்)	..	9
'நிக்நேம்' - கே. வி. எஸ். மணியன்	..	13
ஓரணு - எஸ். சீனிவாசன்	..	18
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	..	19
ஏட்டுச் சுரைக்காய் - டி. எஸ். ராதாபாய்	..	21
அரசி சிரித்தாள் - இந்து	..	24
காக்கைகள் வாழ்க - அழ. வள்ளியப்பா	..	28
வீண் அபவாதம் - பிரஸாத்	..	30
பொழுது போக்கு - சுந்தரம்	..	34
வாழைப்பழக் கேஸ் - 'மூர்த்தி'	..	35
நாடகம் போட்டார்கள் - ராசு	..	38
எண்ணிலே படங்கள் - 'மூட்டை'	..	44
பேசும் சினிமா - புரொபஸர் விஞ்ஞானம்	..	45
நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர்	..	49
கேட்டீர்களா !	..	52
கண்ணன் தபால்	..	53

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

இந்த இதழில் புதிய தொடர்கதை 'அபாயச் சங்கு' ஜிலு ஜிலு என்று ஆரம்பமாகிறது. கிராமத்திலிருந்து ரகு என்ற பையன் பட்டணத்துக்குப் படிக்கப் போகிறான். அவன் ஏறிச் செல்கிற போட்மெயிலைப் போலவே கதையும் விறுவிறுப்புடன் போகிறது. ரகுவின் குறும்புத்தனங்களும் சேஷ்டைகளும் படிக்கப் படிக்கச் சுவாரஸ்யமாய் இருக்கும். மாணவர்களுக்கு இயல்பான விளையாட்டுப் புத்திகொண்ட ரகு கடைசியில் உங்கள் அபிமானத்துக்கு முழுதும் பாத்திரமாகி விடுவான். படித்துப் பாருங்கள். உங்கள் அபிப்பிராயத்தையும் அவ்வப்போது எழுதுங்கள்.

மற்றொரு புதிய தொடர்கதை ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகிறோம். அந்தக் கதை முற்றிலும் புதுமாதிரியாக இருக்கும். கதை அடுத்தபடி என்ன என்ன என்று கேட்டுப் பிரமிக்கும்படி இருக்கும். கதை என்றால் இதுதான் கதை என்று யாரும் ஒருங்கே சொல்லக் கூடிய கதை. இதை யார் எழுதுகிறார் என்பதை மட்டும் இப்போது சொல்ல மாட்டேன். அடுத்த இதழை வாங்கிப் பாருங்கள்.

மதுரையில் ஜூலை மாதம் 19-ஆம் தேதி கண்ணன் கழகக் கூட்டம் மிகப் பிரமாதமாக நடந்தது. அந்தக் கூட்டத்தின் சில காட்சிகளை நீங்கள் உள்ளே பார்க்கலாம். கூட்டம் என்றால் சாதாரணக் கூட்டம் இல்லை. போடி, பழனி, திண்டுக்கல், விருதுநகர் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் கழகக் குழந்தைகள் வந்திருந்தார்கள். விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள். சிற்றுண்டி அருந்தினார்கள். பரிசு பெற்றார்கள். கூட்டத்துக்கு மதுரையிலுள்ள சிறந்த தேசபக்தரும் தமிழ்நாட்டுப் பிரமுகருமான ஸ்ரீமான் ஏ. வைத்தியநாதையர் அவர்கள் தலைமை வகித்தார். பல பெற்றோர்களும் ஆசிரியர்களும் தாய்மார்களும் வந்திருந்தார்கள். பரிசு பெற்றவர்களுடைய பெயர்களைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

பரிசு பெற்ற பெண்கள் (முதல் ஸெட்): (1) வி. எஸ். ராஜம் (R. 1233) பைனாகுலர். (2) கே. ஜயலக்ஷ்மி (J. 234) ஸ்கிப்பிங் ரோப். (3) ராதா (R. 116) ஹாண்ட் பாக்.

இரண்டாவது ஸெட்: (1) ஏ. ராதா (R. 1166) டேபிள் டென்னிஸ். (2) இ. எட்வின் (E. 53) குளோப். (3) கஸ்தூரிபாய் (K. 648) வாட்டர் கலர் பாக்ஸ்.

பரிசு பெற்ற பையன்கள் (முதல் ஸெட்): (1) எஸ். கல்யாணசுந்தரம் (K. 583) காரம் போர்டு. (2) கே. பாலகணபதி (B. 149) புட்பால். (3) ராஜேந்திரன் (R. 83) மிக்கி மௌஸ் போர்டு. (3) ஆர். பிச்சை (P. 4) ஸ்கூல் பாக். (5) கே. சங்கர் (S. 1619) கிரிக்கெட் குல்லாய். (6) பி. சுப்பிரமணியன் (S. 1086) கிரிக்கெட் குல்லாய். (7) கே. கண்ணன் (K. 27) பென்ஸிலும் புத்தகங்களும். (8) அப்துல் ரஹீம் (A.141) புத்தகங்கள்.

பரிசு பெற்ற குழந்தைகளுக்கு எல்லாம் கண்ணன் கழகத்தின் சார்பாக என் ஆசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜய் ஹிந்த்! —ஆசிரியர்.

அபாயச்சங்கு

'நீலம்'

1

கிராமத்தில் ர (ா) கு!

இரட்டை மயிலைக்காளைகள் பூட்டிய வில் வண்டி 'ஜம்' என்று வாசலில் வந்து நின்றது. சாட்டைக்குச்சி ஒரு கையிலும், தார்க்குச்சி இன்னொரு கையிலுமாக வைத்துக்கொண்டு சிங்காரம் அதிலிருந்து கீழே குதித்தான். சவாரி புறப்பட நாழிகையாகும் போலிருந்தது. ஆகவே தன்னுடைய மயிலைக்காளைகளின் வாயில் வைக்கோலைப் பந்து பந்தாக உருட்டி, தீனி கொடுத்துக் கொண்டிருந்தான்.

வீட்டு ரேழியில் யாரோ கவலையோடு பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. அவன் அதைச் சற்று உற்றுக் கேட்டான்.

"அடே! இப்போதே சொல்லிப்பிட்டேன். உன் வால்தனத்தை எல்லாம் இங்கேயே ஒரு மூட்டையாகக் கட்டி வச்சுடணும். தெரியுமா! முன் பின் தெரியாத ஊர் அது. உன் மாமாவோ பல ஜோலிக்காரன். உன்னைச் சதா கட்டிமேய்க்க அவனுக்கு நேரம் இருக்காது. ஆமாம். அவனை உன் சேஷ்டையினால் சந்திக்கு இழுத்துத் தொலைக்காதே. தெரிஞ்சுதா?" என்று ஒரு ஸ்திரீயின் குரல் கேட்டது.

சாயவேஷ்டி முண்டாசைச் சரிசெய்துகொண்டு சிங்காரம் தலையை உயர்த்தி உள்ளே எட்டிப் பார்த்தான்.

கணக்குப்பிள்ளை ஐயாவின் மனைவி சுப்புத்தாயி அம்மாள்தான் பேசிக்கொண்டிருந்தது. அவளுக்கு எதிரே நின்றது அந்த 'வால்'தான். அதுதான் கணக்குப்பிள்ளை ஐயாவின் மகன் ரகு.

ரகு தன் புஷ்கோட் காலரைக் கழுத்துக்கு மேல்புறமாகத் தூக்கி விட்டிருந்தான். ஆசையோடும் ஆவலோடும் ஆகாரத்தையே உற்று நோக்கி நிற்கும் நாயின் தொன்னைக் காது மாதிரி அது சிங்காரத்துக்குத் தோன்றியது. கால்களைப் பரப்பிக்கொண்டு டிரௌஸர் பைகளில் தன் இரு கைகளைப் பாய்ச்சியவாறு ரகு வெகு அலட்சியமாக நின்றுகொண்டிருந்தான்.

அம்மா சொன்னதை அவன் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆனால் இது வழக்கம்தானே! இந்த 'வால்' பிறந்த பத்து வருஷங்களாக அந்தக் கிராமத்தை அவன் படுத்தி வைத்த பாடு கொஞ்சமா, நஞ்சமா? அது ஒரு பெரிய புராணம். அந்தச் சிறப்பின் காரணமாக அவ்வூர் வாசிகள் ரகுவுக்கு அதிசப்படியாக ஒரு காலைக் கொடுத்து, அவன் வால்தனத்துக்கு ஒரு மரியாதை செய்திருந்தார்கள். அதாவது 'ரகு' என்ற இரண்டு எழுத்துக்களுக்கிடையே ஒரு சிறிய காலைப்

புகுத்தி 'ராகு' என்று பெயர் சூட்டியிருந்தார்கள்.

அன்று ஒரு நாள் வேறு ஒரு சவாரிக்கு வண்டி கட்டிக்கொண்டு வந்திருந்தான் சிங்காரம். தெருவிலுள்ள தன்னுடைய ஜமாவோடு அங்கே தோன்றிய ரகு ஏதோ கவனிப்பது போல வண்டிச் சக்கரத்தின் கடையாணியைக் கழற்றி யாரும் கவனியாத சமயத்தில் ஒரு வீட்டுக் கூரையின் மீது வீசி எறிந்துவிட்டான். நல்ல காலமாக முன்னதாகவே சிங்காரத்திடம் இதை ஒரு பையன் தெரிவித்துவிட்டான். இது போல ரகு இன்னும் எத்தனையோ அபாயகரமான காரியங்களை அசட்டுத் துணிச்சலோடு செய்திருந்தான். இதையெல்லாம் சேர்த்து நினைத்தபோது, "இந்த வாலா ஊருக்குக் கிளம்புது? சரிதான்!" என்று சிங்காரம் தனக்குள் சொல்லிக் கொண்டான். அதே சமயத்தில் கணக்கப் பிள்ளை ஐயாவும், காக்கிச் சட்டை, நிஜார் போட்டிருந்த பட்டணத்து ஐயாவும் வெளியே போய்விட்டு அங்கே வந்து சேர்ந்தார்கள்.

"சரி, நாழியாச்சு. புறப்படறேன். இவனைப் பற்றி அதிகமாகக் கவலைப் படாதீங்கோ. எல்லாம் நான் கவனிச்சுக்கறேன். வாராவாரம் கடுதாசி எழுதறேன்" என்று போலீஸ் இன்ஸ்பெக்டரான சுந்தரவதனம் தம் 'ஹோல்டாலை'த் தூக்கிக் கொண்டார்.

ரகு மௌனமாகத் தம் டிபன் பாக்ஸையும் பெட்டியையும் எடுத்துக்கொண்டு வண்டியிலேறிக் கொள்ள நகர்ந்தான்.

துஷ்டப்பிள்ளையாயிருந்தாலும், துன்பங்களைக் கொடுத்தாலும் பிள்ளை தங்களைப் பிரிந்து போவதை நினைத்து ரகுவின் பெற்றோர்கள் கண் கலங்கினார்கள்.

ரகு ஒரே தாவாகத் தாவி வண்டியின் முன்பக்கமாகவே ஏறிக்கொண்டு விட்டான். தம் 'ஹாட்'டை அணைத்தபடி இன்ஸ்பெக்டர் வண்டியின் பின்புறமாக ஏறி உட்கார்ந்தார். மயிலைக்காளைகளைத் தட்டிவிட்டான் சிங்காரம். அவை சிட்டாக ஸ்டேஷனை நோக்கிப் பறந்தன.

சிங்காரம் ரகுவை வலுவில் கூப்பிட்டு, "என்ன தம்பி! அங்கே போய் அடக்க ஒடுக்கமா, நல்ல படியா நடந்து நல்ல பேர் எடுத்துக்கோ. அம்மா எம்பிட்டு சொல்லிச்சு, பாத்தியா?" என்று ஆரம்பித்தான். சுட்டுவிடுகிற மாதிரி ரகு அவனைப் பார்த்தான்.

அதிலிருந்து ரகுவுக்கு மாமாவிடம் பயம் உண்டென்பது சிங்காரத்துக்குப் புரிந்துவிட்டது. ஆகவே அவன் துணிவோடு இன்ஸ்பெக்டரிடமே நேரிடப் பேசத்தொடங்கினான். ரகுவுக்குச் சப்தநாடியும் ஒடுங்கி, கொஞ்ச நஞ்சமிருந்த சுரத்தும் பறந்துவிட்டது. 'இந்தச் சனியன் பிடித்தவனுக்கு என் இந்த வீண் வம்பெல்லாம்? யார் இவனை இதையெல்லாம் இப்போது கிளப்பச் சொன்னது? வாயை மூடிக்கொண்டு வண்டியை ஓட்டுவதுதானே?' என்று சிங்காரத்தைக் கடுமையாகப் பார்த்து மனசுக்குள்ளேயே சபித்தான்.

தன்னை ரகு பார்க்கப் பார்க்கச் சிங்காரத்துக்கு உற்சாகம் பொங்கிக்கொண்டிருந்ததே யொழியப் பேச்சுக் குறையவே யில்லை.

கோயில் வாகன அறையில் புகுந்து அங்கே யானையின்

துதிக்கை, மயிலின் மூக்கு, ரிஷபத்தின் கொம்பு ஆகியவற்றை ஒடித்தது; அந்தப் பழியை அப்பாவிப் பையன்மீது சுமத்தியது; நெல்லி, மா, தென்ன மரங்களில் சரமாரியாகக் கற்களை வீசி மழுங்க மொட்டை அடித்தது; திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியார் திணறி, 'தத்திங் கணத்தோம்' போடும் நிலைமையை உண்டு பண்ணியது முதலிய அநேக சம்பவங்களை அவன் அவிழ்த்து விட்டான்.

சுந்தரவதனம் பிரமித்துப் போயிருந்தார். கீழே குதித்து வீட்டைப் பார்க்க ஓடிவிடலாமா என்று கூட ரகுவுக்குத் தோன்றியது. சிங்காரமோ தொடர்ந்து பேசினான்.

"என்னமோ போங்க! இது சுத்த ராகுகாலங்க! பட்டணத்துச் சீமையிலே நீங்க ரொம்ப உஷாராய் இருக்கணுமுங்க. அங்கே எதுனாச்சும் இது வாலை ஒசத்திச்சின்னா, தாச்சணியம் பாக்காமே ஒரே போடாக ஒட்ட நறுக்கிப் போட்டுடுங்க!" என்று எச்சரிக்கை செய்தான். இதற்குள் ஸ்டேஷனும் வந்துவிட்டது.

மாமாவும் மருமகனும் வண்டியை விட்டு இறங்கினார்கள். சிங்காரம் விடை பெற்றுக் கொண்டான். சாமான்களை எடுத்துக்கொண்டு, ரகு பின் தொடர ஸ்டேஷன் 'வெயிட்டிங் ரூம்' பக்கம் போனார் சுந்தரவதனம். மெயில் வருவதைத் தெரிவிக்கும் முதல் மணி கணகணவென்று ஒலித்தது.

2

ஓடும் ரெயிலிலே..

சிங்காரம் சொன்ன தகவல்களைக் கேட்ட பிறகு ரகுவைச் சென்னைக்கு அழைத்துப்போய் எப்படிச் சரிப்படுத்துவது என்று சுந்தரவதனத்தின் மனம் குழம்பியிருந்தது. அதே சமயத்தில் ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குள் போட் மெயில் பிரவேசித்தது.

சாதாரணமாக இரண்டாம் வகுப்பில்தான் சுந்தரவதனம் பிரயாணம் செய்வார். ஆனால் ரகுவின்

வால்தனத்தை எண்ணி மூன்ரும் வகுப்பு டிக்கெட் ஒன்றரை வாங்கிக்கொண்டார்.

வண்டி நின்றவுடன் மாமாவும் மருமகனும் ஒரு பெட்டியில் ஏறிக்கொண்டார்கள். அன்று மூன்ரும் வகுப்பில் எக்க் கூட்டம். சுந்தரவதனம் போலீஸ் உடுப்பு அணிந்திருந்ததால் வண்டியில் இருந்த சில பிரயாணிகள் நெருக்கி அடித்துக்கொண்டு கொஞ்சம் இடமேற்படுத்திக் கொடுத்தனர். ஹோல்டாலை அவிழ்க்காமல் அப்படியே அதைத் தூக்கிப் பெஞ்சியில் காலி ஏற்பட்ட பகுதியில் வைத்தார் சுந்தரவதனம். ரகுவை அதன்மீது ஏறி உட்காரச் சொன்னர். "அந்த ஜன்னல் பக்கமாக உட்காருகிறேனே, மாமா!" என்ருன் ரகு.

"அதெல்லாம் வேண்டாம்டா. கண்ணிலே என்ஜின் கரி வந்து விழும். இங்கேயே உட்கார். பரவாயில்லை" என்று சுருக்கமாகச் சுந்தரவதனம் பதில் சொல்லிவிட்டார்.

"சின்னப் பையன் தானே, ஸார்! வேடிக்கை பார்த்துண்டு வரட்டுமே!" என்று அங்கே உட்கார்ந்திருந்த ஒரு புகையிலைப் பேர்வழி ரகுவுக்காகச் சுந்தரவதனத்திடம் சிபாரிசு செய்தார். ரகுவுக்கு ஜன்னல் ஓரத்தில் இடம் கிடைத்துவிட்டது. தனக்காகச் சிபாரிசு செய்த புகையிலைப் பேர்வழியை ரகு நன்றியறிதலோடு பார்த்து லேசாகச் சிரித்தான். அவரோடு கலகலப்பாகப் பேசினன். மெயில் சிறிய ஸ்டேஷன்களில் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது.

இரவு 11-மணி. எல்லாரும் தூங்கி வழிந்தார்கள். தமிழ் எழுதவும் படிக்கவும் நன்ருகத் தெரிந்திருந்ததால் ரெயிலில் காணப்பட்ட விளம்பரங்கள், அறிவிப்புகள் முதலியவற்றைத் தானே படித்துக்கொண்டான். பக்கத்திலே வெற்றிலை பாக்குப் பொட்டலம் பிரிந்து கிடந்தது. அகலமான ஒரு வெற்றிலையில் பெரிய விழுதாகச் சுண்ணும்பு இருந்தது. ரகுவின் குறும்புக் கைகள் சும்மா இருக்குமா? பொட்டலத்தைப் பிரிப்பதும் மடிப்பதுமாக இருந்தன.

தாயின் கவலை!

பாலுவுக்கு வயது எட்டாகிறது. அவன் நாலு நாளாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். என்ன ஜுரம் என்று அம்மாவுக்குத் தெரியவில்லை. அவள் கவலையோடு அவன் படுக்கையருகில் வந்து கால் மாட்டண்டை உட்கார்ந்தாள்.

"என்டா அப்பா, தலை வலிக்கிறதா? வாந்தி வருகிற போல் இருக்கிறதா என்ன! சொல்லேண்டா. என் இப்படி முகத்தைச் சிணுங்கிக்கறே?"

"ஐயோ ஐயோ! கால்..." என்ருன் பாலு.

"என்னடா?" என்ருள் அம்மா திகிலுடன்.

"என் கால்மேல் உட்கார்ந்திருக்கயே, இத்தனை நாழிகையா? வலி பொறுக்க முடியவில்லை" என்று அவன் சொன்னபோதுதான் அம்மாவுக்குத் தெரிந்தது.

அவள் முகத்தில் அசடு வழிய உடனே எழுந்துவிட்டாள். பாலு இளித்துக்கொண்டே, "அம்மாடி" என்று காலை இழுத்துக்கொண்டான்.

அவனுக்குத் தூக்கம் வருவதாகக் காணோம். மாமாவுக்குப் பயந்துகொண்டு இருந்த இடத்தை விட்டு நகராமல் உட்கார்ந்திருந்ததால் கால்கள் மரத்துப்போய்விட்டன. இதைச் சரிப்படுத்த மெல்லக் கால்களை உதறிக்கொண்டான். தலைக்குமேல் நிமிர்ந்து பார்த்தான். 'சாமான்களுக்கு மாத்திரம்' என்று எழுதப்பட்டிருந்த பலகையின் மீது பயில்வான் மாதிரி ஓர் ஆசாமி படுத்திருந்தார். அவர் விட்ட குறட்டை கடிகாரத்துக்குச் சாவி கொடுக்கும்போது ஏற்படும் சத்தத்தைப் போல இருந்தது.

பிரயாணிகள் உட்கார இடமில்லை. சாமான்களை வைக்கவும் இடமில்லை. சிலர் கீழே கிடந்த

பெட்டி படுக்கைகளின்மீது சாய்ந்த படியும் ஒருக்களித்தவாறும் தூங்கி வழிந்தார்கள். 'சாமான்களுக்கு மட்டும்' என்று எழுத்துக்கள் பொறித்த பலகைமீதோ அந்தப் பேர்வழி கவலையில்லாமல் காலை நீட்டிக்கொண்டு ஜோஸ்தமாகத் தூங்குகிறார்! என்ன ஆச்சரியம் இது!

'இங்கே எழுதியிருப்பதெல்லாமே இப்படித்தானோ?' என்ற எண்ணம் ரகுவுக்கு ஏற்பட்டது.

'ஆமாம்; அதோ பிடியோடு தொங்குகிறதே ஒரு சங்கிலி! என்ன அது? என்னவோ கீழே எழுதியிருக்கிறதே!' என்று அந்த எழுத்துக்களைக் குனிந்தபடியே படித்தான் ரகு.

"அபாய அறிவிப்பு! வண்டியை நிறுத்தக் கைப் பிடியை இழு. அகாறணமாய் உபயோகிப்பவர்களுக்கு ரு. 50 அபறதம்" என்று வெள்ளை பூசிய தகட்டில் பிழைகளுடன் எழுதியிருந்தது.

பலகைமீது படுத்துத் தூங்குபவர், விளக்கைச் சுற்றி ஒரு கைக்குட்டையால் மறைத்துக் கட்டியிருந்தார்.

வண்டியில் எல்லாரும் அயர்ந்து தூங்கினார்கள். மழைக் காலத்தில் தவளைகள் அலறுவது போல வண்டி முழுதும் வெவ்வேறு விதமான குறட்டைகளின் சத்தம்.

ரகு சுற்று முற்றும் பார்த்தான். மாமாவும் அசதியால் நன்றாக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். புகையிலை அபிமானி புகையிலையை அடக்கியபடியே கண்ணயர்ந்திருந்தார். மெதுவாக ரகு எழுந்து ஹோல்டால் மீதேறி நின்றான். சுண்ணும்பை விரலில் எடுத்துக்கொண்டான். எச்சரிக்கை போட்டிருந்த இடத்துக்கு நகர்ந்து போனான்.

"அறிவிப்பு" என்ற வார்த்தைகளிலுள்ள "வி" என்ற எழுத்தின் மீதும், "அகாறணமாய்" என்ற தொடரிலுள்ள "அ" என்ற எழுத்தின் மீதும் சுண்ணும்பால் தீற்றி, சிறிய திருத்தங்களைச் செய்தான். இப்போது எச்சரிக்கையைத் திருப்பிப் படித்தபோது அவனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை!

எழுத்துச் சீர்திருத்தம் முடிந்தது. அடுத்தபடியாக இன்னொரு வேலையில் திரும்பினான். 'சங்கிலியை இழுத்தால் மெயில் நின்றுவிடுமா? அல்லது சாமான்கள் தட்டில் மனிதர்கள் படுத்திருக்கிறார்களே அதுமாதிரி, பிடியை இழுத்தாலும் வண்டி நிற்காமலேயே போய்க்கொண்டிருக்குமா?' என்ற சந்தேகம் வலுத்துவிட்டது அவனுக்கு. 'இதிலென்ன சந்தேகம் வேண்டியிருக்கு? பார்த்துவிட்டால் போகிறது!' என்ற வேகம் அவனுக்கு மேலோங்கிவிட்டது.

மறுபடியும் எல்லாரும் நன்றாகத் தூங்குகிறார்களா என்று பார்த்துக் கொண்டான். எங்கும் ஒரே குறட்டை மயம். நெஞ்சு படபடத்தது. எப்படியோ மனத்தைத் தளரவிடாமல் பிடியை இழுத்தான். அது லேசில் இழுபடக் காணோம். குருட்டுத் தைரியத்தோடு முழு வலுவுடன், மூச்சைப் பிடித்துக்கொண்டு, இழுத்தேவிட்டான்! அவ்வளவுதான்! உடனே என்ஜின் 'ஓ'வென்று விட்டு விட்டு அலறியது. மெயிலின் ஓட்டம் குறைந்து வண்டி நின்றுவிட்டது. ரகுவின் மார்பு ரைஸ்மில் மாதிரி பக் பக் என்று அடித்துக் கொண்டது. (தொடரும்)



மதுரையில் கூட்டம்

மதுரையில் ஜூலை மாதம் 19-ஆம் தேதி கண்ணன் கழகத்தின் கூட்டம் மிகமிகப் பிரமாதமாக நடைபெற்றது. மாலை 2 மணியிலிருந்தே மதுரை காலேஜ் ஹைஸ்கூல் மைதானத்தில் சிறுவர்களும் சிறுமியரும் உற்சாகத்துடன் கூடத் தொடங்கிவிட்டார்கள். மைதானம் தோரணங்களாலும் கண்ணன் படங்களாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்கௌட் மாணவர்கள் அணிவகுத்து நின்றார்கள். சுமார் 500 மாணவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். பெரியவர்களும் தாய்மார்களும் ஆசிரியர்களும் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். கூட்டம் நடந்த மதுரை காலேஜ் ஹைஸ்கூல் வாசலில் கண்ணன் கழகத்தின் போர்டு குழந்தைகளை, 'வாருங்கள், வாருங்கள்' என்று அழைப்பதுபோல் தொங்குவதைப் பாருங்கள்.

போட்டோ: சங்கர்

கையில் கண்ணன் கழக நம்பர் சீட்டுடன் சிறுவர்கள் சிற்றுண்டி சாப்பிட க்யூ வரிசையில் நுழைகிறார்கள். ஜிலேபி, சுவையான மிக்சர், ருசியான சிறுமலைப் பழம்-ஜில்லென்று ஆரஞ்சுக் கிரஷ் எல்லாம் அவர்களுக்காக அங்கே காத்திருக்கின்றன.

இது ஏதோ ஒரு நடனக் கச்சேரி என்று நினைக்கிறீர்கள்! இல்லை. பெண்கள் மூன்று பிரிவினராக வயதுக்கேற்றபடி பிரிக்கப்பட்டு அவரவர்களுக்கு ஏற்ற போட்டிகளில் கலந்து கொள்ளுகிறார்கள்.

இது பையன்கள் கலந்துகொண்ட ஒரு போட்டி. சுவரில் வரைந்த யானைக்கு ஒரு பையன் கண்ணை வாயினிடத்தில் கொண்டு பொருத்து கிருன்.

மிக்கி மௌஸ் போர்டில் குழந்தைகள் வளையத்தை விட்டெறிகிருர்கள். ஒவ்வொருவனுக்கும் 1000 என்ற கொக்கியில் வளையம் விழ வேண்டும் என்ற ஆசைதான். ஆனல் பாவம், அந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில்தான் வளையம் பெரும்பாலும் விழுகிறது.



முதலில் காரசாரமான விளையாட்டுப் போட்டிகள், பிறகு சுவை மிகுந்த சிற்றுண்டி. அந்தச் சிற்றுண்டி உடனே ஜீரணமாகும்படி குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் விகடக் கச்சேரி. எல்லாம் முடிந்த பிறகு கூட்டம் ஆரம்பமாகிறது. பெரியவர்கள் ஒரு புறமும், பெண்மணிகள் ஒரு புறமும் குழந்தைகள் யாவரும் நடுவிலுமாக அமர்ந்திருக்க, கூட்டம் ஸ்ரீமான் ஏ. வைத்தியநாதையர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. குழந்தைகள் பார்வையிடுவதற்காக மேடையில் பரிசுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ என் ராமரத்தினம், ஸ்ரீ ஏ. வைத்தியநாதையர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் மூவரும் மேஜைக்கு முன் அமர்ந்திருக்கிறார்கள். கண்ணன் கழகத்தின் வளர்ச்சியைப் பற்றியும் நோக்கங்களைப் பற்றியும் 'ஆர்வி' பேசிக் கொண்டிருக்கிறார்.

தலைவர் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கிய பிறகு கூட்டம் 'ஜே ஜே' என்ற கோஷத்துடன் முடிவுற்றது

இந்தக் கூட்டம் இவ்வளவு அருமையாகவும் வெற்றிகரமாகவும் நடப்பதற்குக் காரணமாயிருந்த எல்லாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

‘நிக்நேம்’

கே. வி. எஸ். மணியன்

நான் படியில் காலடி எடுத்து வைத்தபொழுதே பள்ளிக்கூட அறையில் மாணவர்களின் கூச்சல் காதைப் பிளந்தது. அவர்களில் ஒருவன், “அமாவாசை வருகிறதுடோய்!” என்று கத்தினன். அவன் சொல்லிய வார்த்தைகள் என் இருதயத்தை அம்புபோல் தைத்தன. எவ்வளவு நாட்கள்தான் இவர்களை இப்படியே விட்டுக் கொண்டிருப்பது! மௌனமாக நாற்காலியில் போய் அமர்ந்தேன்.

பையன்களின் சத்தம் சற்றும் அடங்கியபாடில்லை. அவர்களின் மீது பச்சாத்தாபம் அதிகமாக ஆக வாத்தியார் என்ற மரியாதைகூட இல்லாமல் தலைமேல்தான் ஏறிக் குதிக்கிறார்கள். எப்படியாவது இவர்கள் மனசை திருப்ப வேண்டுமென்று தீர்மானித்தேன்.

முதல் முதலில் நான் படிப்பை முடித்ததும், என் பெற்றோர்கள் டாக்டருக்கோ, அல்லது வக்கீலுக்கோ படிக்கச் சொன்னார்கள். ஆனல் எனக்குச் சின்னஞ் சிறு குழந்தைகளை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆசை. பள்ளி ஆசிரியராக ஆனேன். நான் இங்கே வந்து ஒரு வருஷகாலம் ஆயிற்று. இந்தப் பள்ளிக்கூடத்து மாணவர்கள் மிகப் பொல்லாதவர்கள் என்று மற்ற ஆசிரியர்கள்கூடச் சொன்னார்கள். அதனல் என்ன என்று நான் இந்த ஊருக்கு வந்தேன். இங்கே ஒவ்வொரு வாத்தியாருக்கும் பையன்கள் வேடிக்கை வேடிக்கையாகப் பெயர் சூட்டியிருந்தார்கள். ஆனல் என்னிடம் மரியாதையாக நடந்துகொண்டார்கள். இதைக் கண்டு நான் பெருமிதம் அடைந்தேன். ஒரு நாள் இரவு ஏழு மணிக்கு ரோட்டின் வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தேன். எதிர்பாராதவிதமாகப் பெருமழை வந்துவிட்டது. எனக்குக் கொஞ்சம் பார்வை மட்டு. ஆகவே சீக்கிரம் வீடு செல்ல ஓட ஆரம்பித்தேன். நான் ஓடிய பாதை ரிப்பேர் செய்த இடம். ஒரு புறம் கருங்கல் முட்டுக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த இருட்டில், முட்டுத் தடுக்க, பக்கத்தில் உள்ள பள்ளத்தில் விழுந்துவிட்டேன். மழை ஜலத்தால் அந்தப் பள்ளத்தில் சேறு தங்கி இருந்தது. என் ஆடைகள் முழுதும் சேற்றால் சந்தனபிஷேகம் போல ஆயிற்று. அன்றைத்தினம் அமாவாசை. அந்தச் சமயத்தில் யாரோ ஒருவர், ‘ஓஹோ, ஹோ’ என்று சிரிப்பது போல் ஒரு குரல் கேட்டது.

உடனே நான் திரும்பிப் பார்த்தேன். விஷமக்கார பாலுதான் சிரித்துக்கொண்டிருந்தான். நான் திரும்பியதும் ஓடிவிட்டான். நான் சற்றுக் கறுப்பு நிறம். எல்லாம் சேரவே எனக்கு ‘அமாவாசை’ என்று கேலிப் பெயரைச் சூட்டியே விட்டார்கள்! வகுப்பிலும் தெருவி

வாத்தியார்: மிகப் பெரிய கண்டம் எதுடா, பாலு?

பாலு: எமகண்டம்தான், ஸார்!

—K. *வீரபத்திரன்.*

லும் எனக்குத் தெரியாமலேயே இந்தப்பெயர் வழங்கத் தொடங்கியது.

ஒரு பையன், "ஸார்! ஒரு சந்தேகம்!" என்று எழுந்திருப்பான்.

"கேளேன்!" என்பேன்.

"கிருஷ்ணபட்சம் அமாவாசைக்கு முன்னுலா பின்னுலா, ஸார்?" என்பான் அவன். கொல்லென்று வகுப்புப் பையன்கள் அனைவரும் சிரிப்பார்கள். பிறகுதான் எனக்கு அமாவாசை என்ற பெயர் சூட்டியிருப்பதை நான் உணர்ந்தேன். இதை எவ்விதம் மாற்றுவது!

வகுப்பில் ஒன்றும் தெரியாதவன் போல, "குழந்தைகளே! இன்று உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்" என்று ஆரம்பித்தேன்.

கதை என்றால் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா?

நான் சொல்ல ஆரம்பித்தேன்.

* * *

நானும் உங்களைப்போல் சிறு வயதில்மிகவும் விஷமக்காரனாகவும் துஷ்டனாகவும் இருந்தேன். ஆனால் படிப்பில்மட்டும் கெட்டிக்காரன்தான். ஒரு தரம் சொல்லிக்கொடுத்தால் அது அப்படியே மனசில் பதிந்துவிடும். அதனால் மற்றப் பையன்கள் நான் சொல்வதைத் தட்டமாட்டார்கள்.

அதிலும் அந்த முரட்டுச் சோமு எனக்கு வலது கைபோல. அவனைக் கண்டாலே வாத்தியாருக்குக்கூட நடுக்கம்தான். அவனும் நானும் எங்கே சென்றாலும் ராம லட்சுமணர் போல் சேர்ந்துதான் செல்வோம்.

ஆனால் பள்ளியில் நானும் சோமுவும் தனித்துத்தான் உட்கார வேண்டியிருந்தது. நாங்கள் இருவரும் சேர்ந்தாற்போல் உள்ள டெஸ்காகத்தான் பார்த்து உட்கார்ந்தோம். ஆனால் 'பலாக்காய் திருடி' எங்களை அதிகம் பேசுபவர்கள் என்று பட்டம் கட்டி, ஆங்கில உபாத்தியாயரிடம் கூறி, சோமுவுக்கு வேறு இடம் கொடுக்கச் செய்துவிட்டார்.

'பலாக்காய் திருடி' என்பவர்தான் எங்கள் சயன்ஸ் உபாத்தியாயர். ஞாபக சக்திக்குப் பேர் போனவர்! 'ஸ்பிரிட்லாம்ப்'பைக் கொளுத்துவதற்குப் பதில் சோதனைக் குழாயைக் கொளுத்திவிடுவார்.

ஒவ்வொரு வாத்தியாருக்கும் பெயர் கொடுப்பதை முன்னிட்டு என்னிடம் எல்லாப் பையன்களும் ஆலோசனை கேட்பார்கள். கமிட்டி

யில் நான் கொடுக்கும் 'நிக்நேம்' தான் அங்கீகரிக்கப்படும். சயன்ஸ் வாத்தியாருக்குக் காரணத்துடன் தான் 'பலாக்காய் திருடி' என்று பெயர் வைத்தோம்.

ஒரு நாள் மார்க்கெட்டில் நான் காய்கறி வாங்கிக்கொண்டிருந்தேன். அப்போது சயன்ஸ் வாத்தியார், மூலையில் பலாக்காய் விற்றுக் கொண்டு இருந்த கிழவியிடம் சென்று அதன் விலையைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

நானும் பக்கத்தில் பச்சை மிளகாய் வாங்குவதுபோல் பாவனை செய்தேன். ஆனால் என் மனமும் கண்களும் சயன்ஸ் வாத்தியாரையே நாடி ஓடின. அவர் பலாக்காயைக் கையில் வைத்துக்கொண்டே இருந்தார்; கிழவி மற்றவர்களிடம் விலை பேசிக்கொண்டு இருக்கும்போது, மறந்து போய்ப் பைக்குள் போட்டுக்கொண்டு விட்டார். கிழவி இதைக் கவனிக்கவில்லை. பிறகு, "எடுங்க சாமி, பலாக்காயா வேணும்?" என்றாள் அவள். சயன்ஸ் வாத்தியார்தான் ஞாபகத்தில் புலி ஆச்சே! பைக்குள் போட்டுக்கொண்ட ஞாபகம் இல்லாமல், "ஆமாம்" என்றார்.

"விலை எட்டணா!" என்றாள் கிழவி.

"இந்தச் சின்னக் காயா, எட்டு அணா? நேற்றுத்தான் ஒருவர் மூன்று அணாவுக்கு வாங்கிக் கொண்டு போனார். உனக்கு இந்த ஊரா, அல்லது வெளி ஊரா? கண்ணை மூடிக்கொண்டு விலை சொல்றியே!" என்று சொல்லிக் கொண்டே பையில் போட்ட பலாக்காய் ஞாபகம் இல்லாமல் வாத்தியார் போய்விட்டார். பாவம், கிழவிக்கு ஒரு காய் நஷ்டம்!

அன்றைத் தினம் பள்ளிக்கூடம் அமர்க்களப்படக் கேட்பானேன்? எல்லாரிடமும் சயன்ஸ் வாத்தியாரின் வண்டவாளத்தை எடுத்து விட்டேன். "காலையில்



மார்க்கெட்டில் நம்ம சயன்ஸ் வாத்தியார், ஒரு பலாக்காயைத் திருடி, பையில் போட்டுக்கொண்டு விட்டார்'' என்றேன்.

உடனே சயன்ஸ் வாத்தியாருக்குப் 'பலாக்காய் திருடி' என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. எல்லாரும் இதை ஒரு பெரிய வைபவம்போல் எண்ணி, பெஞ்சியின் மேல் ஏறிச் சீட்டி அடிக்கவும், சோமு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளவும், மணி டெஸ்கில் தாளம் போடவும் ஆரம்பித்து விட்டார்கள்.

"டேடேய், பசங்களா, என்னடா வகுப்பு அறையில் சத்தம்?- இது என்ன மார்க்கெட்டு என நினைத்துக்கொண்டீர்களோ?'' என்று சோமு வாத்தியார்போல் பாவனை செய்துகொண்டு 'ஜம்' என்று நாற்காலில் அமர்ந்து கொண்டான். டிராயரைத் திறந்து ஒரு சாக்குக் கட்டியை எடுத்தக் கரும்பலகையில் சயன்ஸ் வாத்தியார் போன்று ஒரு படம் போட்டான். அதன் பக்கத்தில் ஒரு பலாக்காயையும் வரைந்தான். "அன்பான தோழர்களே, இவர் யார் என்று உங்களுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டான்.

எல்லாரும், "நன்ருகத் தெரியுமே'' என்ருர்கள்.

இதற்குள் சயன்ஸ் வாத்தியார் வரும் சத்தம் கேட்டதும் சோமு, பேடையிலிந்து டபார் என்று குதித்துத் தன் டெஸ்கண்டை போய்ச் சாதுபோல் உட்கார்ந்து கொண்டான். வாத்தியாரும் வந்து நாற்காலியில் அமர்ந்தார். எல்லாப் பையன்களும் அடக்க முடியாத சிரிப்புடன் வாயைப் பொத்திய வண்ணம் இருந்தார்கள். வாத்தியார் டிராயரை இழுத்து டஸ்டரை எடுத்தார். போர்டை அழிக்கப் போகும்போது படத்தைக் கவனித்துவிட்டார். படத்தின் அருகில் பலாக்காய் பொம்மையையும் பார்க்கவே அவருக்குக் கோபம் எல்லையை மீறியது.

"மரியாதையாய்ச் சொல்லுங்கள்! யார் இதை வரைந்தது?'' என்ருர். உடனே, "நான்தான், சார்!'' என்ருன் சோமு.

"எதற்காகடா, பொம்மையையும் பலாக்காயையும் போட்டாய்?'' என்ருர். அவருடைய குற்றமுள்ள

பெரியவர்: ஏண்டா தம்பி அழறே?

பையன்: எங்க அண்ணனுக்கு மட்டும் லீவு விட்டுருக்காங்க. எனக்கு லீவே விடலே.

பெரி: ஏன்?

பையன்: நான் ஸ்கூல்லே இன்னும் சேரல்லேயே.

—R. வத்ஸலா (V. 715) மயிலாப்பூர்.

நெஞ்சு குறுகுறுத்தது போல் இருந்தது.

உடனே அவன், "அன்றொரு நாள் ஒரு கிழவியிடம் யாரோ ஒருவன் பலாக்காய் வாங்கும்போது, விலை பேசுவதுபோல் பாவனை செய்து, கிழவி மற்றவரிடம் விலை பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு காயை மறைத்துப் பைக்குள் போட்டுக்கொண்டான். அவன் படத்தைப் போட்டிருக்கிறேன்" என்றான்.



"யார் அவன்?" என்றார் வாத்தியார்.

"அதுதான் தெரியவில்லே!" என்றான் சோமு.

"அது எப்படித் தெரியாமல் இருக்கும்?" என்றார் அவர். அவர் முகம் விகாரமாக மாறியது. துக்கம் தொண்டையை அடைத்தது. அந்தப் பரிதாபமான முகம் இன்னும் என் கண் முன் நிற்கிறது. எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் நானும் ஒரு நாள் அவரைப்போல் பட்டப் பெயர் சுமக்க வேண்டியிருக்கும் என்று அடபோது எண்ணியதே இல்லை. சிறுவர்களுக்கு எதவும் வேடிக்கையாகத்தான் இருக்கும். இன்றுதான் அவர் மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது.

நாளைக்கு நீங்களும் பெரியவர்களானால் இதைப் புரிந்துகொள்வீர்கள். எல்லாருமே டாக்டர், வக்கீல் என்று ஆகப்போகிறீர்கள்? உங்களில் சிலர் வாத்தியாராகாமலா போகப் போகிறீர்கள்? ஆகையால் வாத்தியாருக்குப் பெயர் சூட்டும்போது அநுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். ஆசிரியர் மனசைப் புண்படுத்துவதால் உங்களுக்கு என்ன லாபம்?

* * *

நானும் கதையை முடித்தேன். மணியும் அடித்தாகிவிட்டது.

பையன்கள் இப்போதெல்லாம் என்னை, 'அமாவாசை' என்று அழைப்பதை விட்டுவிட்டார்கள். "டேய், அவர் நம்ப வாத்தியார்டா!" என்ற குரல் என் காதில் அடிக்கடி விழுகிறது.

ஒரணா

எஸ். சீனிவாசன்

ஹோட்டல் 'கணபதி பவன்' களையிழந்து காணப்பட்டது. அதன் முதலாளி கணபதி கல்லாப் பெட்டியில் ஈ ஓட்டிக்கொண்டிருந்தார். காரணம் காலையிலிருந்து பதினொரு மணி வரையில் சரியான வியாபாரமே இல்லை. எல்லாம் மீந்துகிடந்தன.

கணபதிக்கு மகா வருத்தமாக இருந்தது. தெருவையே உற்று நோக்கிக்கொண்டிருந்தது அவர் முகம்.

சிறிது நேரம் சென்றது. அவர் முகம் திடீரென்று மலர்ந்தது. காரணம் பத்து வாலிபர்கள் கிரிக்கெட் விளையாடிவிட்டு ஹோட்டலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

'சரி, இரண்டு ரூபாயாவது தேறும்!' என்று சொல்லிக்கொண்டே சர்ரென்று காரமாக மூக்குப் பொடியை இழுத்துக் கொண்டு உட்கார்ந்தார் கணபதி.

பத்துப் பேரும் அட்டகாசமாய் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கவனிக்காதது போல் உட்கார்ந்திருந்தார் கணபதி. சிறிது நேரம் சென்றது. உள்ளே சிரிப்பும் கூச்சலுமாய் ரகளைப் பட்டது. நேரம் ஆக ஆக இன்று நல்ல வேட்டைதான் என்று அவருக்குத் தோன்றிற்று. கடைசியில் எல்லோரும் மேஜைக்கு எதிரே வந்தார்கள். கணபதி ஆவலுடன், "என்னடா, பில் ஆச்சு?" என்று கூவினார். ஹோட்டல் பையன் சாவதானமாக "ஒரணா!" என்று கத்தினான்.

கணபதி திடுக்கிட்டார். "என்னது?" என்றார். மறுபடியும் பையன், "ஒரணா" என்றான். அதற்குள் வந்தவர்களில் ஒருவன் ஓர் அணாவை மேஜைமேல் அலட்சியமாய்ப் போட்டான். எல்லாரும் வெளியே சென்றனர்.

உடனே கணபதி, "டேய், அவர்கள் என்னடா சாப்பிட்டார்கள்?" என்றார்.

"ஒன்றுமில்லை. நாலு ஐஸ் வாட்டர்!" என்றான் பையன்.

கணபதியின் மலர்ந்த முகம் வாடியது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(B) 194. பாலசுப்பிரமணியன் P., ஹாஸ்பெட். 195. பாபு, V.K., சென்னை-17. 196. பாக்கியம், K., கம்பளை, சிலோன். 197. பால சுப்பிரமணியன், D., திண்டிவனம். 198. பாலசுப்பிரமணியன், N., தேவக்கோட்டை. 199. பால கிருஷ்ணன், R., சென்னை-4. 200. பூஷணம், கிருஷ்ணமூர்த்தி, ஈசுவரன், சென்னை-2. 201. பால சுப்பிரமணியன், S. V., சென்னை-6. 202. பாலன், P. S., சென்னை-7. 203. பாஸ்கர், M.G., பாயிண்ட் பெட்ரோ, சிலோன். 204. பாலசுப்பிரமணியன், N., கோபிசெட்டிபாளையம். 205. பாபு, நாராயணன், சுப்பையா, ஆவடி. 206. பாலசுப்பிரமணியன், N., வத்தலக்குண்டு. 207. பாகீரதி, தாரா, C. A., திண்டிவனம். 208. பாலாஜி, S., ஆதிகுடி. 209. பால கிருஷ்ணன், S. A., சேலம். 210. பகார்தீன், P. S., கொழும்பு-2. 211. பாலசுந்தர ராஜு, C. S., சென்னை-4. 212. பாலசுப்பிர மணியன், M. A., திருச்சி. 213. பாலகிருஷ்ணன், அலமேலு, S., சென்னை-17. 214. பாலசுப்பிர மணியன், சந்தானம், லக்ஷ்மணன், ஜயராமன், S., திருச்சி. 215. பாலகுமார், R., சென்னை-4. 216. பலராமன், D., பூந்தமல்லி. 217. பாலகிருஷ்ணன், S., புதுப் பாளையம். 218. பாபுஜி, M. S., கோயம்புத்தூர். 219. பூமாதேவி, ரங்கநாயகி, S. N., மதுரை. 220. பூமாதேவி, சாந்திதேவி, S., தாம்பரம். 221. பாலசுப்பிர மணியன், கிருஷ்ணமூர்த்தி, V., திருச்சி. 222. பாஸ்கரன், ராதா கிருஷ்ணன், பாலசுப்பிரமணியன், P. T., ராஜபாளையம். 223. பால கங்காதரன், சென்னை-14. 224. பாஸ்கரன், R., புதுச்சேரி. 225. பாலசுப்பிரமணியன், K.M., புதுச்சேரி. 226. பாலசுப்பிர மணியன், கலாமணி, பாலன், பாலாமணி, V. R., குடியாத்தம். 227. பூராசாமி, P., பறங்கிப் பேட்டை. 228. பாலகிருஷ்ணன், B., சென்னை-1. 229. பாலசுப்பிர மணியன், சாமிநாதன், T., காணியூர். 230. பத்திரி நாரா யணன், கும்பகோணம். 231. பால

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி....................

(தேதி, மாதம், வருஷம்)

ஆகஸ்ட் '52 கூபன் நெ:

சுந்தரம், D., சென்னை-4. 232. பாலசந்திரன், K., மண்டபம் காம்பு. 233. பாலு, K.V., (விலாசம் எழுதவில்லை). 234. பால சுப்பிரமணியன், நடராஜன், திருவண்ணாமலை.

(C) 121. சந்திரசேகரன், அமர்நாத், S., திருச்சி. 122. செல்லம்மாள், புனிதவதி, மங்கையர்க்கரசி, J., நாகூர். 123. சிதம்பரம், R.M.A.N., குழிப்பிறை. 124. சித்ரா, தியாகராஜன், V., சென்னை-18. 125. சொக்கலிங்கம், C.A., சேலம். 126. சந்திரன், V., அறந்தாங்கி. 127. சிதம்பரம், S.V.S., கள்ளக்குறிச்சி. 128. சின்னயமணி R., எடப்பாடி. 129. சிதம்பரசுப்பிரமணியன், P., மாயவரம். 130. சந்திரன், N.K., சென்னை-1. 131. சந்திரா, G., வில்லிவாக்கம். 132. சின்னசாமி, N., கோபிசெட்டிபாளையம். 133. சிதம்பரம், C.M., திருச்சி. 134. சந்திரா, N., சென்னை-4. 135. சின்னசாமி, T.P., திருச்செங்கோடு. 137. சொக்கலிங்கம், P.K., கவுண்டப்பாடி. 138. செல்லம்மாள், M., கலாகா, சிலோன். 139. சந்திரசேகரன், R., கும்பகோணம். 140. சிட்டிசுவரன், R., சென்னை-1. 141. செல்லப்பா, L., ஈரோடு. 142. சந்திரசேகரன் A., திருவண்ணாமலை.

(D) 101. துரைராஜ், M., தஞ்சாவூர். 102. தசராஜா, D.S., மேட்டுப்பாளையம். 103. தக்ஷிணமூர்த்தி, காங்கேயம். 104. திலீப்குமார், L., சென்னை-4. 105. தனசேகரன், T.S., சென்னை-4. 106. துரைராஜ், திருப்பதி, T., தூத்துக்குடி, 107. துளசிராம், K., சென்னை-11. 108. தண்டபாணி, A.R., கொங்கல்நகரம். 109. தாமோதரன், K., கோயம்புத்தூர். 110. துரைராஜன், S.M., வாலாடி. 111. தேவராஜலு, M.V., சென்னை-11. 112. தர்மர், A., திருநெல்வேலி. 113. திவாகரன், R., சென்னை-11. 114. தசரதராமன், V., புதுக்கோட்டை. 115. துளசிராமன், O.K., திருச்சி. 116. தினகரன், ரமணன், மீனாக்ஷி, M., சென்னை-19. 117. தர்மலிங்கம், T.N., கொடைக்கானல். 118. தண்டபாணி, S., போதனூர். 119. டேவிட், C.M., மதுரை. 120. டெய்சி, தங்கதுரை, W., உடுமலைப்பேட்டை. 121. துரைசாமி, A.K., சென்னை-2.

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் 1952-ஆம் வருஷக் கூபன்களைத் தான் அனுப்பவேண்டும். 1951-ஆம் வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

ஏட்டுச் சுரைக்காய்

டி. எஸ். ராதாபாய்

ரங்கு அல்லது 'மிளகு' என்னும் ரங்கநாதன் பள்ளிக்கூடப் பத்திரிகையிலும் மற்றும் பல பத்திரிகையிலும் பாலர் மலர் கதைகளை எழுதி அனுப்புவான். அவன் கதைகளில் நவரசமும் நர்த்தனம் செய்யும். ஈகை, தயை, அன்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கதைகளையே அவன் அதிகமாக எழுதி வந்தான். பள்ளிச் சஞ்சிகைக்கு ஒரு கதை எழுதித் தரும்படி வாத்தியாரே அவனைக் கேட்டார் என்றால் பாருங்களேன்!

அன்று விடுமுறையானதால் மணி ஒன்பது ஆகியும் தன் அறையை விட்டு ரங்கு வெளிவரவில்லை. அப்பொழுதுதான் ஒரு கற்பனை உதயமாகவே மேஜை அருகில் ஓடிப் பேனாவை எடுத்தான். அவனுக்கு இருந்த உத்சாகத்தில் கடைக்குட்டி விஷமக் கிட்டு பார்வையில் பேனா பட்டு விட்டதைக் கவனிக்கவில்லை. காகிதத்தில், "அன்று திருவிழா பார்க்க, கிட்டு, ராமு, சேது யாவரும் கிளம்பினார்கள்" என்று எழுதுவதற்குள், "என்ன! இது வீடா, சத்திரமா? என் பேனாவை யார் உடைத்து வைத்தது?" என்று கத்தினான். பக்கத்தில் காற்றாடி கட்டிக்கொண்டிருந்த மணிதான் பேனாவை எடுத்திருக்க வேண்டும் என்று அவன் முதுகைச் சரியாகப் பதம் பார்த்தான். மணியின் அலறல் சத்தம் ஓய்வதற்குள் அடுக்களையிலிருந்து அம்மா, "ஏன் தான் லீவு விடுகிறார்களோ! இந்த லீவிலும் சம்பளம் வாங்கிக்கொண்டு இவர்களை மடக்கிப் போடக் கூடாதா! அப்பப்பா! நமக்கு இந்த ஜன்மத்தில் ஒரே தடவைதான் விடுதலை" என்று முனகும் சப்தம் கேட்டது.

அவனுக்குப் பரிந்துகொண்டு தன்னை அடிக்க வரவில்லையே, அதுவே போதும் என்று பக்கத்தில் அகப்பட்ட ஒரு பென்ஸிலை எடுத்து ரங்கு எழுத ஆரம்பித்தான். திடீரென்று உதயமான கற்பனை இந்த ரகளையில் மறந்து போய் விட்டது. "ரைட்டோ! 'அன்புச் சங்கிலி'யை எழுதி முடிப்போம்" என்று டிராயரைத் திறந்து பார்த்தான். அவன் கையெழுத்துப் பிரதிகளைப் பார்த்ததும் பகீரென்றது. பல நாட்கள் வாத்தியாரிடம் திட்டுக்கள் வாங்கி எழுதின கற்பனைச் சித்திரங்களை அடுப்புப் பற்றவைக்கவோ வேறு எதற்கோ யாரோ கிழித்து விட்டிருந்தனர்.

அப்பொழுதுதான், "சாப்பிட வாயேன்டா. உனக்காகக் காத்திருந்தால் மீதி வேலைகள் ஆக வேண்டாமா?" என்று உள்ளே நுழைந்த அம்மாவைக் கண்டதும் கோபமும் துக்கமும் தொண்டையை அடைத்தன. "எனக்கு இப்போது பசி இல்லை. போ.. அம்மா" என்று கத்தினான். அம்மா வெளியே சென்றதும், "அப்பாடா!" என்று பெருமூச்

செறிந்தவாறே பென்ஸிலைக் காகிதத்தின் மேல் வைத்தானோ இல்லையோ, "வண்ணன் வந்திருக்கானாம். அம்மா உன்னைப் பென்ஸில் கேட்டு வாங்கிவரச் சொன்னாள்" என்று பத்து வயது நந்து, 'எ. ஆர். பி' சங்கைப் போல் இரைச்சல் போட்டுக்கொண்டு உள்ளே வந்தான். "இங்கே யாருக்குடா செவிடு? பென்ஸில் இருந்தாலும் கொடுக்க முடியாது. ம்..போ!" என்று அவன் காதை முறுக்கியவாறே அவனைப் பிடித்து வெளியே தள்ளினான். அவன் போகிற போக்கில் தங்கை அம்புலுவின் பென்ஸிலைப் பிடுங்கிச் சென்றுவிட்டான். அவள் சப்தஸ்வரங்களையும் கூட்டுவதற்குள் ரங்கு வெளியே வந்து, "அழுகையைப் பார்!" என்று அவள் முதுகில் நான்கு அறைகளைக் கொடுத்து விட்டுத் தன் அறைக்குச் சென்று கதவை உள்ளே தாழிட்டுக் கொண்டான். தங்களை வேண்டுமென்றே துன்புறுத்துவதாக நினைத்த 'சின்னப் பட்டாளம்' கதவைச் சிறிது நேரம் தட்டிப் பார்த்து, கையும் காலும் ஓய்ந்து விடவே வேறு விஷமத்தைத் தேடிச் சென்றனர்.

ரங்குவும் தன் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டான். அப்பா! ஒரு வழியாய்க் கதையை எழுதி முடித்துவிட்டு அவன் சாப்பிடப் போனான்; பிறகு விளையாடச் சென்றுவிட்டான்.

அடியை மறக்காததோடு பழி வாங்கும் உத்தேசத்துடன் ரங்குவின் அறைக்குள் நுழைந்த மணி, ஞாபகமறதியாக ரங்கு மேஜையின் மேல் வைத்துச்சென்ற கதையைப் படிக்கத் தொடங்கினான். கதையின் சுருக்கம் பின்வருமாறு: கிட்டு ஓர் ஏழைச் சிறுவன். பரீட்சைச் சமயத்தில் மாதச் சம்பளம் கட்ட முடியாமல் தவித்தான். சம்பளம்

கட்டினால்தான் பரீட்சை எழுதலாம். அவன் பெற்றோர்கள் அன்றாடம் கஞ்சிக்கு உழைப்பவர்கள். பள்ளிக்கூடத்திலிருந்து நின்று விடலாம் என்று கிட்டு

நினைத்தபொழுது ரகு என்ற சிறுவன் வகுப்புப் பையன்களை ஒன்று திரட்டி எல்லாரும் சேர்ந்து எப்படியாவது கிட்டுவின் சம்பளத்தைக் கட்டிவிட வேண்டும் என்று கூறுகிறான். அதற்காக அவன் தன் பேனாவைப் பாதி விலைக்கு விற்று அந்தப் பணத்தைப் போடுகிறான். வீட்டில் அவனுக்கு நல்ல உதை கிடைக்கிறது. ஆனால் கிட்டு பரீட்சை எழுதுகிறான். இந்த ஆனந்தத்தில் தனக்கு விழுந்த உதையை மறக்கிறான் ரகு.



கதையில் ஒரு பகுதியைப் படித்த மணிக்குச் சிரிப்புத்தான் வந்தது. "நாம் நமக்காகவே வாழ்தல் நன்றன்று. விலங்குகளும் பறவைகளுங்கூடப் பிறருக்கு உதவி மகிழும் பல கதைகளை நாம் படித்திருக்கிறோம். வாழ்விலும் அவை நமக்கு உதவுவதைக் காண்கிறோம். பிறர் துயரைக் கண்டு உருகாத நெஞ்சத்தினர் மனிதப் பிறவியைச் சேர்ந்தவர் என்றே எனக்குத் தோன்றவில்லை. ஒரு நாளைக்கு நம்மில் இத்தனை பேர் ஐஸ் க்ரீம், பொரி, கடலை வாங்கி வயிற்றைக் கெடுத்துக் கொள்கிறோம். அதை என் ஓர் ஏழைப் பையனுக்குக் கொடுத்து உதவக் கூடாது? ஒரு நல்ல காரியம் செய்தோம் என்ற திருப்தியாவது மிஞ்சும். கேட்டவர்களுக்கு இல்லை என்பது நமக்கு எவ்வளவு இழிவைத் தருகிறது!" இதே பாணியில் கதாநாயகன் பேசிக்கொண்டிருந்தான்.

மணி, "ஓஹோ, ஐயா கருணாகரர்தான்! உடைந்த பிளேடு கொடுக்கக்கூட உயிரை விடுவான்! அன்பாம், கருணையாம், அடிகொடுக்க அஞ்சாத வீரன்!" என்று முணுமுணுத்தவாறே கதையின் அடியில், "ஆசிரியர் அவர்களே! 'எட்டுச் சுரைக்காய் வீட்டுக்கு உதவாது' என்ற தலைப்புக் கொடுத்து அனுப்புங்கள்" என்று மசியால் எழுதிவிட்டு ரகு வருவதற்கு முன்பு அறையை விட்டு வெளியே சென்றான்.

அரசி சிரித்தாள்

இந்து

ஜயபுரி களையிழந்து காணப்பட்டது. ஜனங்கள் முகத்தில் சந்தோஷக் குறியே ஏற்படவில்லை. எல்லார் மனத்திலும் ஒரே ஏக்கம் குடிகொண்டிருந்தது. இதற்குக் காரணம் அந்த நாட்டின் அரசி சந்தோஷமில்லாமல் இருந்ததேயாகும். அவள் சந்தோஷமில்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. அவளைச் சந்தோஷமாக இருக்கச் செய்வதற்குத் தன்னால் முடிந்த முயற்சியெல்லாம் அரசன் செய்து பார்த்துவிட்டான். ஆனால் அவள் முகத்தில் சிரிப்பு என்பதே ஏற்படவில்லை.

ஒவ்வொரு நாள் காலையிலும் ஒரு வாளி ஜலம் அரசியின் படுக்கை அறையிலிருந்து வேலைக்காரி கொண்டு வருவாள். இது இரவெல்லாம் அரசியின் கண்களிலிருந்து உதிர்ந்த ஜலமாகும். இதைக் காண அரசனின் மனம் புழுங்கும். அரசி மிகவும் நல்லவள். அவள் எல்லாராலும் நன்கு நேசிக்கப்பட்டவள். ஆகவே அவள் துக்கப்படும்போது எல்லா ஜனங்களும் துக்கப்பட்டார்கள்.

அரசி மறுபடியும் சிரித்துப் பார்க்கப் போகிறோமா என்ற சந்தேகம் உண்டாகிவிட்டது அரசனுக்கு. இதற்கு என்ன வழி செய்யலாம் என்று யோசிப்பதற்காக அரண்மனையின் தோட்டத்தில் ஒரு கூட்டம் கூட்டினான் அரசன். கூட்டத்துக்கு நகரிலுள்ளவர்கள் எல்லாரும் வந்தார்கள்.

"என் அன்புள்ள பிரஜைகளே! என் கோரிக்கைக்கு இணங்கி நீங்கள் ஒருவர் தவறாமல் எல்லாரும் இங்கு வந்து கூடியிருப்பதைக் காண எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. கொஞ்ச நாட்களாக நம் அரசி சந்தோஷமில்லாமல் இருப்பது உங்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயமாகும். அவளுக்கே தெரியவில்லை அதன் காரணம். ராஜ்டத்திலுள்ள உயர்ந்த பொருள்களையெல்லாம் கொடுத்தேன். பிரபல வைத்தியமெல்லாம் செய்து பார்த்தேன். இருப்பினும் அவள் முகத்தில் சிரிப்பைக் காணவில்லை. அவளை மறுபடியும் யார் சிரிக்க வைக்கிறார்களோ அவர்களுக்கு இந்த ராஜ்யத்தில் ஒரு ஜமீனையே கொடுத்துவிடுகிறேன். அதற்காகவே இப்பொழுது இங்கு உங்களைக் கூட்டினேன். இதற்கான முயற்சியைச் செய்யுமபடி கேட்டுக்கொள்கிறேன்'' என்றான் அரசன்.

தங்களால் ஆன முயற்சியைச் செய்வதாகச் சொல்லிவிட்டு எல்லாரும் சென்றார்கள். சென்றவர்கள் அரசியைச் சிரிக்க வைப்பதற்கான வழியைக் கண்டு பிடிப்பதில் முனைந்தார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தது.

அவரவர்கள் தாங்கள் கண்டு பிடித்த உபாயங்களுடன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். அர

சனும் அரசியைச் சிங்காதனத்தில் உட்கார வைத்தான். தானும் அவன் பக்கத்தில் உட்கார்ந்தான். துயரமே உருவாகத் தலை கவிழ்ந்தபடி உட்கார்ந்திருந்தாள் அரசி. பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

ஒவ்வொருவரும் அவரவர் கஷ்டப்பட்டுச் சேகரித்த பொருளை அரசியின் முன்னிலையில் கொண்டு வைத்தார்கள். எப்பொழுது அவள் முகத்தில் சிரிப்பு வரப்போகிறது என்று ஆவலுடன் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் அரசன். ஆனால் அவன் எதிர்பார்த்த சிரிப்பு மட்டிலும் அவள் முகத்தில் தோன்றவில்லை. அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்த பொருள்களுக்குத் தன் வந்தனத்தைச் செலுத்தினாளேயொழிய அவள் சிரிக்கவே இல்லை.

விலை மதிக்கமுடியாத ஆபரணங்கள், உயர்ந்த பொன் ஆடைகள், பல அரிய வேடிக்கைப் பொருள்கள் எல்லாம் அங்கே மலைபோல் குவிந்து கிடந்தன. இவைகளில் எதுவும் அரசியைச் சிரிக்க வைக்கவில்லை. ஆனால் சிரிப்புக்குப் பதிலாக இரண்டு நீர்த் துளிகள் தான் அவள் கண்களினின்றும் உதிர்ந்தன. இவைகளில் எதுவும் தன்னைச் சிரிக்க வைக்கவில்லையே என்ற ஏக்கம் அவளுக்கு!

இதைக் கண்ட அரசனும் அழ ஆரம்பித்துவிட்டான். வந்த ஜனங்களும் அழ ஆரம்பித்துவிட்டார்கள். ஒரே கண்ணீர்ப் பெருக்கு!

இந்தச் சமயத்தில்தான் அங்கே ஒரு தள்ளாத கிழவி வந்து சேர்ந்தாள். அவள் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடிக்கொண்டிருந்தது-

அந்தக் கிழவி நேராக அரசியின் முன்னிலையில் போய் நின்றாள். தலை குனிந்து வணங்கிவிட்டு, "அம்மணி! உங்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. இனி நீங்கள் கஷ்டப்படவேண்டிய அவசியமே இல்லை. உங்களுக்குச் சந்தோஷத்தை அளிக்கக்கூடிய பொருள் ஒன்றை நான் கொண்டு வந்திருக்கிறேன்" என்றாள்.

அரசன் ஆச்சரியத்தினால் அவளை நோக்கினான். ஜனங்களும் தங்கள் அழுகையை மறந்து அவளை நோக்கினார்கள். அரசியும் ஏதோ சொப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டவள்போல் அவளைப் பார்த்தாள்.

"உண்மையாக நீங்கள் அவ்விதம் நினைக்கிறீர்களா?" என்று கிழவியை நோக்கிக் கேட்கவும் கேட்டுவிட்டாள் அரசி.

"சந்தேகமென்ன! இதோ பாருங்கள்!" என்று தன் சேலைக்குள் மறைத்து வைத்திருந்த ஓர் அழகிய தங்கப் பெட்டியைக் காட்டினாள் கிழவி.

"ஊஹூம்! ஆபரணப் பெட்டிதானே? ஆபரணங்களைக் கண்டு அலுத்துவிட்டது எனக்கு" என்றாள் அரசி.

"இது ஆபரணப்பெட்டி இல்லை, அம்மணி! இதுவரையில் நீங்கள் பார்த்திராத பொருள் இது. நீங்கள் மட்டும் என்ன! யாருமே பார்த்திராத பொருள். மாயத்தீவு தெரியுமா, மாயத்தீவு! அங்கிருந்து வந்திருக்கிறது இது. உங்களுக்கு என்றே தனியாக வரவழைக்கப்பட்டது. யாருக்கும் கிடைக்க முடியாத அதிசயப் பொருள்" என்றாள்.

"என்ன இருக்கிறது அதில்?" என்றாள் அரசி ஆவலுடன்.

"அப்படிக் கேளுங்கள், அம்மணி! அப்படிக் கேளுங்கள். அதில் என்ன இருக்கிறது என்று சொல்வதைவிடக் காட்டிவிடுவது நல்லதில்லையா?" என்றாள் கிழவி சிரித்துக்கொண்டே.

"சரி, காட்டு பார்க்கலாம்."

"காட்டுவதற்குத்தானே கொண்டு வந்திருக்கிறேன்! ஆனால் ஒன்று; துளிச் சப்தம் கேட்கக் கூடாது. எல்லாரும் கப்சிப் என்று இருக்கவேண்டும். அத்துடன் கொஞ்சம் உஷாராகவும் இருக்க வேண்டும்."

"அதற்கென்ன, அப்படியே" என்றாள் அரசி.

கிழவி பெட்டியைத் திறக்க ஆரம்பித்தாள். எங்கும் ஒரே நிச்சப்தம்! மூச்சுப் பேச்சு இல்லை. எல்லாரும் பெட்டியையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

முதலில் கிழவி பெட்டியின் ஒரு மூடியைத் திறந்தாள். பிறகு மற்றொரு மூடியைத் திறந்தாள். பிறகு இன்னொரு மூடியைத் திறந்தாள். ஒவ்வொரு மூடியைத் திறக்கும்போதும் ஜனங்கள், அரசன், அரசி யாவரும் ஆவலுடன் பெட்டிக்குள் பார்த்தார்கள். இந்த மாதிரி நாலு, ஐந்து மூடிகளைக் கிழவி திறந்துவிட்டாள்.

"இன்னும் எத்தனை மூடி திறக்கப் போகிறாய்?" என்றாள் அரசி.

"ஆயிற்று! ஆயிற்று! இதோ வந்துவிட்டது. இதுதான் கடைசி மூடி. இதோ திறந்துவிட்டேன்" என்று கடைசி மூடியை மெதுவாக, சர்வ ஜாக்கிரதையுடன் திறக்க ஆரம்பித்தாள் கிழவி.

எல்லாரும் திறந்தவாய் திறந்தபடியே இமைகூடக் கொட்டாமல் பெட்டியையே பார்த்துக்கொண்

டிருந்தார்கள்—உள்ளே என்ன அப்படிப்பட்ட அதிசயப் பொருள் இருக்கிறது என்பதைப் பார்க்கும் ஆவலில்.

கிழவி கடைசி மூடியையும் திறந்தேவிட்டாள்.

ஆ; என்ன ஆச்சரியம்! தொபுக்கென்று ஒரு தவளை, பெட்டிக்குள்ளிருந்து வெளியே தாவிக் குதித்தது! குபீரென்று சிரித்துவிட்டார்கள் அனைவரும். அரசியும் கொல்லென்று சிரித்துவிட்டாள்.

"வேறென்ன இருக்கிறது பெட்டியில்?" என்றாள் அரசி ஆவலுடன்.

"வேறொன்றுமில்லை" என்றாள் கிழவி.

"தவளைக்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தாய்?" என்று சொல்லிவிட்டு ஒரு சிரிப்புச் சிரித்தாள் அரசி.

"அம்மணி! என் உபாயம் கைகூடிவிட்டது. நீங்கள் எங்கே சிரிக்காமல் இருந்துவிடுவீர்களோ என்று பயந்தேன். சிரித்துவிட்டீர்கள். பரவாயில்லை! இனி நீங்கள் சிரிப்பீர்கள். உங்கள் தாடைக்குள் நீங்கள் சிரிக்க முடியாதபடி ஒரு சிறு பிடிப்பு இருந்தது. ஒரு வித வாயுப்பிடிப்பினால் அது உங்களுக்குத் தெரியாமல் இருந்தது. எதிர்பாராமல் சிரித்தால்தான் அந்தப் பிடிப்பு விடும் என்று நான் அநுபவத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். இனி அந்தப் பிடிப்பு விட்டுவிட்டது. உங்கள் கவலையும் தீர்ந்தது" என்றாள் கிழவி.

அரசனுடைய சந்தோஷத்தைச் சொல்லியே முடியாது. தான் சொன்னபடியே ஒரு ஜமீனை அவளுக்குக் கொடுக்க முன் வந்தான்.

"அரசி சந்தோஷமாக இருந்தால் போதும். எனக்குக் குழந்தை குட்டிகள் கிடையாது. ஆகையால் எனக்கு வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே விறுவிறுவென்று போய் விட்டாள் கிழவி.

"அவள் சாதாரணக் கிழவி அல்ல. தேவலோகத்திலிருந்து வந்தவள்" என்றுதான் எல்லாரும் சொல்லிக்கொண்டார்கள்.



காக்கைகள் வாழ்க!

அழ. வள்ளியப்பா

எட்டு மணியும் அடித்தது.
இன்னும் தனது படுக்கையில்
குட்டி யப்பன் தூங்கினன்,
குறட்டை விட்டு அருமையாய்.
'காகா!' 'காகா!' சப்தமோ
காதைத் துளைக்க லானது.
'ஆஹா! ஊஹூ!' என்றவன்
ஆத்தி ரத்தில் விழித்தனன்.
கண்ணை விழித்துப் பார்க்கையில்
காகக் கூட்டம் ஒன்றினைக்
கண்டான், தன்னைச் சுற்றிலும்
கடிக்கலானான், பற்களை.
'தூக்கம் தன்னைக் கெடுக்கவா
துணிந்து வந்தீர்?' என்றதும்,
காக்கை யாவும் ஒன்றுபோல்
'காகா, காகா' என்றன.

கோபம் கொண்டு அவனுமே
        குதித்துக் கொண்டு எழுந்தனன்.
'காகா, காகா கா'வெனக்
        கடுமையாகக் கத்தின.
நாகம் போலச் சீறினன்;
        நாயைப் போலப் பாய்ந்தனன்.
'காகா' என்றே திரும்பவும்
        கத்திக் கொண்டே எழும்பின.
வேக மாக அவனுமே
        விரட்ட எண்ணி ஓடினன்.
'காகா காகா கா'வெனக்
        கதறிக் கொண்டே பறந்தன.
விரைந்தே அவனும் அவைகளை
        விரட்டிக் கொண்டே ஓடினன்.
துரத்திச் சென்றான் ஆதலால்
        சோம்பல் பறந்து போனது.
தூக்கம் தன்னைப் போக்கவும்,
        சுறுசுறுப்பாய் ஓடவும்
ஊக்கம் தந்த காக்கைகள்
        உலகில் வாழ்க, வாழ்கவே!

வீண் அபவாதம்

பிரஸாத்

அன்று வெள்ளிக்கிழமை. மறு இரண்டு நாளும் பள்ளிக்கூடம் லீவுதானே என்று கோபு 'ஜாலி'யாக விளையாடிவிட்டுத் திரும்பி வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். வீடு பள்ளிக்கூடத்திலிருந்து சரியாக இரண்டு மைல். சாலையோடு வந்தால் மூன்று மைல். குறுக்குப்பாதை அவ்வளவு பத்திரமானது அல்ல. கோபு தைரியமாகக் குறுக்குப்பாதையில் நுழைந்து விட்டான். அவன் அதிருஷ்டம் அன்றைக்கு மறுநாள் அமாவாசை. நல்ல கும்மிருட்டு.

வந்துகொண்டேயிருந்த கோபுவுக்குக் காலில் ஏதோ தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தான். ஒரு மோதிரம். அதன் மதிப்பு அவனுக்கு என்ன தெரியும்? இருந்தாலும் எடுத்து ஜேபியில் போட்டுக்கொண்டான்.

தகப்பனார் ஆபீஸிலிருந்து இன்னும் வீட்டுக்கு வரவில்லை. அம்மாவுக்கு வம்புக்குக் கூட ஆளில்லை. அக்கம்பக்கத்துப் பெண்கள் கோவிலுக்குப் போய்விட்டார்கள். தனியாக இருப்பதற்குப் பயமாக இருந்தது. வாசல் கதவை நன்றாகச் சாத்திவிட்டு உள்ளே காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஆபீஸில் அன்றைக் கணக்குகளை ஒருவழியாக முடித்துவிட்டுச் சோமுவின் தந்தை ராஜாராமன் எழுந்து ஒரு சோம்பல் முறித்துவிட்டுக் கோட்டை எடுத்து மாட்டினார். உடனே டெலிபோன் மணி அடித்தது. "இதேதடா சனியன்!" என்று எடுத்துக் காதில் வைத்துக்கொண்டார். வேறு யாருமில்லை. ஆபீஸர்தான் வீட்டிலிருந்து கூப்பிட்டார். ராஜாராமனைத் தம் வீட்டில் வந்து பார்க்கும்படி ஓர் அவசரக் கட்டளை போட்டுவிட்டு டெலிபோனை வைத்துவிட்டார். வேறு வழியின்றிச் சைக்கிளில் கிளம்பினார் ராஜாராமன்.

மாமா: அதோ மாட்டியிருக்கிற சட்டைப் பையில் பொடி டப்பி இருக்கு, எடுடா.

விச்சு: ஏன் மாமா, அதை நீங்களே எடுத்துக்கப்படாதோ? கைக்கு எட்டரூப்பலேதானே இருக்கு.

மாமா: போடா முழுச் சோம்பேறி! என் கையை நீட்டச் சொல்றுன்!

—பாபு B. 127.

ஆபீஸர் வீட்டு நாய் இரண்டு குரைப்போடு அவரை வரவேற்றது. ஆபீஸர் முகம் களையிழந்து வெளிறியிருந்தது. ராஜாராமன் உள்ளே போய் ஒரு கும்பிடு போட்டு விட்டு மரியாதையாய் ஒதுங்கி நின்றார். ஆபீஸர் அலட்சியமாக அவரைப் பார்த்துவிட்டுக் கனைத்தார்.

"உட்காரும்" என்றார்.

ராஜாராமன் புது மாட்டுப் பெண்ணைப்போல் கூனிக் குறுகிக் கொண்டு எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

எடுத்த எடுப்பிலேயே ஆபீஸர் அவரிடம், "உம்மை ரொம்ப யோக்கியமானவர் என்று நினைச்சிண்டிருந்தேன்" என்று தொடங்கினார்.

"ரொம்ப சந்தோஷம்."

"அது முழுதும் தப்புன்னு இன்னிக்குத்தான் தெரிஞ்சுண்டேன்!"

ராஜாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன ஸார், நீங்க சொல்றேள்? எனக்கு ஒன்றும் புரியல்லியே!"

"புரியாதைய்யா புரியாது! எடுத்துக் கமுக்கமா அமுக்க மட்டும் தெரியுமாக்கும்!"

"எதை ஸார்? யார் ஸார், அமுக்கிட்டா? இப்படி என்னமோ புதிர் போடறேளே!...."

"புதிர் போட்டு இங்கே யாரும் விளையாடல்லே! பேசாமெ எடுத்ததைக் கொண்டு வந்து இருந்த இடத்துலே வச்சுடும். நானும் கமுக்கமா விஷயத்தை அமுக்கிடறேன். வீணா போலீஸ்-கீலீஸ்னு தகராறு எதுக்கு?"

"ஸார், தயவு பண்ணிக் கொஞ்சம் விவரமாச் சொல்லுங்களேன். எனக்கு ஒன்றுமே புரியலே."

"விவரமாத் தெரியணுமா? சரி; சொல்றேன். இன்னிக்கு என் கோட்டுப் பாக்கட்டிலே என்னுடைய வைர மோதிரத்தைக் கழட்டி வச்சுருந்தேன். சாயங்காலம் வீட்டில் வந்து பார்த்தால் பை காலி. இன்று முழுதும் உம்மைத் தவிர வேறு யாரும் என் ரூமுக்கு வரல்லே. நீர்தானே கோட்டுப் பாக்கெட்டிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்து வந்தது? உம்மைத் தவிர என் கோட்டை வேறு யாரும் தொடல்லே!"

ராஜாராமனுக்குக் கண்ணில் நீர் முட்டிவிட்டது. "ஸார், நன்னா யோசிச்சுச் சொல்லுங்கள்! வீணா ஒருத்தர் மேலே பழி சுமத்தாதீர்கள்!"

"இப்படியெல்லாம் ஒழுங்காக் கேட்டா வராது. அது அதுக்குச் சரியான வழி செய்தாத்தான் நடக்கும்."

ராஜாராமன் தாங்க முடியாத வேதனையோடு வெளியே வந்தார்.

வீட்டில் நுழைந்ததும் கோபு, "அம்மா, அப்பா வந்துட்டார்" என்று கத்திக்கொண்டே தந்தையைச் செல்லமாக நெருங்கினன். தந்தையின் கவலை அவனுக்கு என்ன தெரியும்?

"அப்பா, எனக்கு என்னப்பா வாங்கிக்கொண்டு வந்திருக்கே?"

கவலையெல்லாம் ஆத்திரமாக மாறியது. "போடா சரிதான், வேறே வேலையில்லை. தரித்திரம்!"

சுந்து: எங்க லாண்டரியிலே சட்டை, டிராயரைப் போட்டால் பாதிப் பொத்தானை உடைச்சுத் தராண்டா.

நந்து: தேவலையே! எங்க லாண்டரியிலே பொத்தானை முழுசா அனுப்பருன்; ஆனல் சட்டைத் துணிகளைத்தான் பாதியா அனுப்பருன்.

—V. 140

என்ருர். "யார், நம்ப கோபுவா தரித்திரம்? ஏன் இப்படிக் குழந்தையை அடிச்சுக் கொல்றேள்? அவன் இன்னிக்குப் புதையல் ஒன்று கொண்டு வந்திருக்கான்" என்ருள் அம்மா.

"ஆகா, எனக்கும் அவனுக்கும் புதையல்தான் கிடைக்கும். யாரையானும் புதைச்சாத்தான்!"

"ஏன் இப்படி வருத்தமாகப் பேசறேள். இதோ பாருங்கள்."

அவள் கையில் டால் வீசும் ஒரு வைர மோதிரம் காட்சியளித்தது. உடனே அவருக்குச் சிறிது நேரத்திற்கு முன் ஆபீஸர் வீட்டில் நடந்தது ஞாபகம் வந்தது.

அவருடைய முகத்தின் மாறுதலைக் கண்ட அவர் மனைவி, "உங்கள் முகம் ஏன் இப்படி மாறுகிறது?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை; சும்மாத் தலைவலி" என்று மழுப்பிவிட்டார்.

"சூடாகச் சமையல் செய்து வச்சிருக்கேன், சாப்பிடலாம். வாருங்கள்."

"எனக்கு இப்போ ஒன்றும் வேண்டாம். கொஞ்சம் குடிக்க ஜலம் கொடு, போதும்!"

அவர் தண்ணீர் ஒரு டம்ளர் குடித்துவிட்டுப் படுக்கப் போய்விட்டார்.

காலையில் ராஜாராமன் ஆபீஸுக்குப் போகும்போது அந்த மோதிரத்தை ஒரு பொட்டணம் கட்டிப் பையில் போட்டுக்கொண்டார். மனசு படக் படக் என்று அடித்துக்கொண்டேயிருந்தது. ஆபீஸில் நுழைந்ததுமே அவரை ஆபீஸர் வரச் சொன்னதாகச் சேவகன் சொன்னன்.

"சரி; இதுக்குத்தான்" என்று நிச்சயம் செய்துகொண்டு ஆபீஸர்

முன் போய் நின்றார். நேற்று இரவு இருந்ததற்குஇப்போது நேர்மாருகச் சிரித்த முகத்துடன் அவரை வரவேற்ருர் ஆபீஸர்.

"வெரி ஸாரி, மிஸ்டர் ராஜாராம்! நேத்திக்குத் தெரியாத்தனமா உங்களிடம் சந்தேகப்பட்டேன். நம்ப பையன் ஆசாரியிடம் கொண்டு போயிருக்கிருன். அப்போ அங்கே எங்கேயோ தொலேச்சுட்டானும். ஆபீஸுக்கு வரப்போ நானும் சரியாகக் கவனிக்கல்லே. இப்போ அவனுகவே சொல்லி விட்டான்.." ஆபீஸர் நிறுத்தாமல் சொல்லி முடித்தார்.

ராஜாராம் மெள்ளப் பையிலிருந்து அந்தப் பொட்டணத்தைப் பிரித்து அவிழ்த்து நீட்டினர். அதைப் பார்த்த ஆபீஸர் அதை எடுத்துப் பார்த்தார். "இதுதான். இதுதான், ஸார்,என் மோதிரம்! இது எப்படி ஸார் உங்களுக்குக் கிடைச்சுது?"

ராஜாராமன் நிதானமாக, "தயவு பண்ணி உங்கள் காரை அனுப்பி நம்ப ரெண்டு பேருடைய பையன்களேயும் வரவழையுங்கள். என் பையன் தான் நேற்று இதைக் கொண்டுவந்தான்!"

பையன்கள் இருவரும் வந்தனர்.

ஆபீஸர் கோபுவிடம் மோதிரத்தைக் கொடுத்து, "இது உனக்கு எப்படியப்பா கிடைச்சுது?" என்ருர்.

"எங்க ஸ்கூலுக்குப் போகிற வழியிலே ஒரு புளியந்தோப்பு இருக்கு. அதுலேதான் நேத்திக்கு ஸ்கூல்லேருந்து வரப்போ கண்டெடுத்தேன்!"

"என்டா வாலு, நீ அந்தப் பக்கம் போனியாடா?" என்ருர் ஆபீஸர், தன் பையனேப் பார்த்து.

"ஆமாம்பா. நானும் அடுத்த வீட்டு அம்பியும் ஆசாரி வீட்டுக்குப் போகும்போது புளியங்காய் அடிச்சோம். அப்போத்தான் இது விழுந்தாப்பலே இருந்துது. தேடிப்பார்த்தேன். காணும். பேசாமெ வந்துட்டேன்."

"சரி சரி, ஓடுங்கள்!"

"ரொம்ப தாங்ஸ், ஸார்! இப்படித் தங்கமானவரைப் போய்ச் சந்தேகப்பட்டேனே. என்னே மன்னித்துவிடுங்கள் ஸார்!" என்ருர் ஆபீஸர்.

"பரவாயில்லே, ஸார். இதெல்லாம் சகஜம்" என்று கூறினர் ராஜாராமன்.



பொழுது போக்கு

S. சுந்தரம் (S. 72.)

மேலிருந்து கீழ்: (1) "அகர முதல எழுத்தெல்லாம் '..........' முதற்றே உலகு. (2) பெயரைக் கேட்டாலே குலை நடுக்கம் உண்டாகுமே. (4) கப்பலில் இது காட்டும் கருவி உண்டு. (5) சிறுவர்கள் வீண்........களில் ஈடுபடக்கூடாது. (8) ருசி. (10) பலபேர் உட்காரக்கூடிய இடம் தாறுமாறாக இருக்கிறது. (13) இதில் சவாரி செய்யலாம் (14) பலர் செய்த இதனால்தான் நமக்கு இன்று சுதந்தரம் கிடைத்திருக்கிறது. (15) இது ஒரு தேசமல்ல; பல ஊர்களிலிருந்து வரும் பிரதிநிதிகள் கலந்து பேசுகின்ற கூட்டம். (17) மரம் பெரியது; ஆனால் விதையோ மிகச் சிறியது. (19) புது இடத்துக்குப் போவதென்றால் இதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு போகவேண்டும். (21) ஓர் அளவை. (22) இது தென்னாட்டில் பிரசித்தி பெற்ற கோடை வாசஸ்தலம். (23) இது என்றதுமே மனசு பகீர் என்கிறது (24) சரஸ்வதி; (25) ஆச்சரியம் ஒரே எழுத்தினால் குறைந்திருக்கிறது (26) எஜமானி. (27) தாயின் இதற்கு ஈடு இணையே இல்லை. (30) விதியை இதனால் வெல்லலாம் என்பார்கள்.

இடமிருந்து வலம்: (1) வியப்புக்குறி. (3) சூரியன். (6) நெற்றிக்கு மங்களகரமாக அணிவது. (7) இந்து மதத்தில் ஒரு சமயம். (9) பெண்களின் ஆடை. (11) இதை ஏரில் பூட்டி உழுவார்கள். (12) இது பழங்கால ராஜ்யத்தின் தலைநகர். (16) ஆண்தான்; திரும்பியிருக்கிறான். (18) பிரார்த்தனை உள்ளவர்கள் இதைத் தூக்குவார்கள். (20) இது நீரில் மிதந்து செல்லும். (22) வாயை மூடியிருப்பது இது. (24) எதையும் பாட்டாகவே பாடிவிடுவார் இவர். (28) கடைசி ஓர் எழுத்தைச் சேர்த்தால் அப்பா. (29) உலகிலேயே பெரிய மலை இது. (31) சிறைவாசம் செய்பவன். (32) மிகவும் உயர்ந்த பொருளை....அற்ற பொருள் என்பதுண்டு.

(விடைகள் கடைசிப் பக்கத்தில்)

வாழைப்பழக் கேஸ்

மூர்த்தி

★



குடமுருட்டி குண்டுராவுக்கு வாழைப்பழம்என்றால் உயிர்.

ஒருநாள் அவர் தெருவில் போய்க்கொண்டிருந்தார். அப்போது அவர் பார்வை பக்கத்துக் காம்பவுண்டுச் சுவரைத் தாண்டி உள்ளே தோட்டத்தில் விழுந்தது. சுமார் நாற்பது பழங்கள் கொண்ட ஒரு சிறிய வாழைத்தார், தொங்கிக்கொண்டிருந்தது. பார்த்தவுடன் ராவின் நாக்கில் ஜலம் ஊறியது. அப்போது மாலை சுமார் ஏழு மணி இருக்கும். சூரியன் மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான். குண்டு ராவ் அங்கு வந்து நின்றுகொண்டார். சுற்றுமுற்றும் பார்த்தார். தெருவில் ஜன நடமாட்டம் குறைந்து சூனியமாக விளங்கியது. அவர் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, தம் பூதாகாரஉடலைத் தூக்கிக்கொண்டு சுவரின்மீது தத்தித் தத்தி ஏறினார். மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. சுற்றும் ஒரு கண்ணோட்டம் விட்டார். ஒருவரையும் காணாது இருக்கவே அந்தக் குலையை அறுத்தார்.

"யாரது? இந்நேரத்தில் சுவர் மேலே, என்ன வேலை? இறங்கு கீழே!" என்ற குரல் கேட்டது. குண்டு ராவ் திகிலுடன் திரும்பிப் பார்த்தார். பின்னால் நின்று கொண்டிருந்தான் கான்ஸ்டேபிள் ஆறுமுகம்! அவருக்கு ஏற்பட்ட திகிலில், கத்தி நழுவித் தோட்டத்தில் விழுந்தது. கீழே இறங்கினார் அவர் தாருடன்.

"நடவுங்க சார், ஸ்டேஷனுக்கு! நீங்களே இப்படிச் செய்தால்?" என்று மிரட்டினான் ஆறுமுகம்.

"ஏதோ தெரியாமல் செய்துவிட்டேன். பிள்ளை குட்டிக்காரன். தயவு செய்து விட்டுடப்பா!"

அழ மாட்டாத குறையாகக் கெஞ்சினார் ராவ். அவனுக்கும் பாதி கொடுத்துங்கூடச் சரிக்கட்ட முயன்றார். ஆனால் அவன் மசிகிற வழியாக இல்லை. வெகு நாளாகக் கேஸ் கிடைக்காமல் அலைபவன், வரும் கேஸைச் சுலபத்தில் விட்டுவிடுவானா? ஆறுமுகம் தாரைத் தூக்கிக்கொண்டு, "வாங்க சார்! மீறிப் போனால் பத்து ரூபாய் அபராதம். அறுக்கும்போது ஆனந்தமாகத் தானே இருந்தது?" என்று பல விதமாகப் பரிகாசம் செய்து

கொண்டே ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனான்.

ஸ்டேஷனை அடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. ராவுக்கு மனத்தில் ஒரே பயம். அவமான மாகவும் இருந்தது. வீட்டில் பெண்டு பிள்ளைகள் என்ன செய்வார்களோ என்ற கவலை வேறு. 'போயும் போயும் தன் புத்தி இப்படியா கேவலமாகப் போகவேண்டும்!' என்று தம்மைத் தாமே கடிந்து கொண்டார்.

ஸ்டேஷனில் போலீஸ் இன்ஸ் பெக்டர் இல்லை. வீட்டுக்குப் போய் விட்டார். அவர் மறுநாள்தான் வருவார் என்று அறிந்துகொண் டான். உடனே கேஸைப் பதிவு செய்ய முடியாதாகையால் குண்டு ராவை ஆறுமுகம் லாக்கப்பில் கொண்டு வைத்தான். அவருடைய கெஞ்சலுக்குச் செவி சாய்க்காமலேயே, "ராவுஜி ஐயா, உன் பழத்தை நீயே வைச்சுக்கோ" என்று கூறி விட்டு, தாரைக் கீழே வைத் தான். பிறகு கேஸ் கிடைத்த சந்தோஷத்தில் சீட்டி அடித் துக்கொண்டே வெளி யேறினான்.

அங்கிருந்த பெஞ்சில் படுத் துக்கொண்ட ராவுக்குக் கவலை யால் தூக்கமே வரவில்லை. என்ன என்னவோ நினைத்துக் கொண்டு நேரத்தைக் கடத்தி னார். புழுக்கம் தாங்காமல் எழுந்து உட்கார்ந்தார். வாழைத்தாரைப் பார்த்தார். தமக்கு வந்த கோபத்தை அடக் கிக்கொண்டு, தப்ப ஏதாவது வழி உண்டா என்று சிந்தித் தார்.

வெகுநேர யோசனைக்குப் பிறகு அவருக்கு ஒரு வழி தோன்றியது. சாட்சியம் இல்லாவிட்டால் எப் படித் தம்மைத் தண்டிக்கமுடியும்? சாட்சியத்தை ஒழித்துவிட் டால்?...உடனே அவர் வாழைப் பழத்தின் முன் உட்கார்ந்தார். ராவ் வாழைப்பழம் தின்பதில்தான் புலியாயிற்றே. ஒரே நிமிஷத்தில் எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டி னார்-தோல் உள்பட த்தான்!

வெள்ளி முளைத்தபோது அவர் எழுந்து இடத்தை நன்றாகத் தட் டிச் சுத்தம் செய்தார். மனத்தில் நிம்மதியுடன் இன்ஸ்பெக்டர் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்.

மறுநாள் காலை சுமார் எட்டு மணிக்கு இன்ஸ்பெக்டர் முன் ஆஜ ரானார் ராவ். ஆறுமுகம் தோட்



டத்தில் நடந்தவற்றைக் கூறினான்.

"எங்கேடா 'எவிடென்ஸ்'?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். "இதோ" என்று கூறிக்கொண்டே குனிந்தவன் திடுக்கிட்டான். அறை முழுதும் தேடியும் தாரைக் காணும். இன்ஸ்பெக்டர் சிடு சிடு என்று எரிந்து விழுந்தார். இது தான் சமயம் என்று குடமுருட்டி குண்டுராவ் தாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சாதித்தார். இன்ஸ்பெக்டர் ஆறுமுகத்தை நன்றாகத் திட்டிவிட்டு, அவரை விடுவித்தார்.

சிறிது தூரம் அவரைப் பின் தொடர்ந்த ஆறுமுகம் அவரிடம், "என்ன ஐயா, எல்லாவற்றையும் முழுக்க முழுங்கிட்டயே! எனக்கு ஒரு பழமாவது வைக்கக்கூடாதா?" என்றான் பரிதாபமாக.

ராவ் தம் மடியை அவிழ்த்து ஆறுமுகத்திடம் ஒரு வஸ்துவைக் கொடுத்தார். அது வாழைத்தாரின் காம்பு! சுமார் ஒன்பது அங்குல நீளமிருக்கும். "இதை மாத்திரம் முழுங்க முடியவில்லை. இந்தா, இதை நீயே வச்சுக்கோ!" என்று காம்பை ஆறுமுகத்திடம் கொடுத்தார் ராவ்.

திகைத்து நின்றான் ஆறுமுகம். ராவ் தம் பாவத்திற்கும் வாழைப் பழ ஆசைக்கும் முழுக்குப் போடக் குளத்தை நோக்கி நடந்தார்.

நாயின் நன்றி

வெகு காலத்துக்கு முன் எங்கேயோ ஓர் ஊரில் ஒரு மனிதனும் ஒரு நாயும் இறந்தனர். அந்த வழியே சென்ற ஒரு சித்த புருஷர் அந்த இரண்டு உடல்களையும் பார்த்தார். அவைகளுக்கு உயிர் கொடுக்கவேண்டும் என்று நினைத்தார். முதலில் மனிதனுடைய உடலைப் பரிசோதித்தார். அதில் இருதயமே இல்லை. நாயின் இருதயம் அதன் இடத்தில் இருந்தது. உடனே அவர் நாயின் இருதயத்தை எடுத்து மனிதன் மார்பில் பொருத்தினார்; பிறகு கொஞ்சம் மண்ணை எடுத்து நாயின் உடலில் வைத்து, ஏதோ மந்திரம் சொல்லி ஊதினார். இரண்டு உடலும் உயிர் பெற்று எழுந்தன. உயிர் பெற்ற நாய் தன் தலையைத் தூக்கி, வாலை ஆட்டி நன்றி தெரிவித்தது. மனிதனோ தன்னைப் பிழைக்க வைத்த யோகிக்கு நன்றி தெரிவிக்கவில்லை; அது மட்டும் இல்லை; அவரை வாயாரத் திட்டிவிட்டும் போனான்.

நாடகம் போட்டார்கள்

ராசு

காட்சி 1

[பகல் ஒரு மணி. ரகுவின் வீட்டுத் திண்ணையில் பையன்கள் குழுமியிருக்கிறார்கள். பாலு, கந்தன், மணி, ராமு, கோவிந்தன், சுந்தரம், ராமசந்திரன், கோபாலன் மற்றும் பலர் வந்திருக்கிறார்கள்.

ரகு: (எழுந்து, சற்று மேடான இடத்தில் உட்கார்ந்துகொண்டு) நமக்கோ பள்ளிக்கூடம் சாத்திவிட்டார்கள். பொழுது போகவில்லை. ஏன் நாம் நாடகம் போடக்கூடாது? அதைப்பற்றி நாம் கூடி ஆலோசனை செய்யவே எல்லாரையும் அழைத்திருக்கிறேன்.

பல குரல்கள் ஏக காலத்தில்: ஆம்..ஆம்..அவசியம் நாம் நாடகம் போடலாம்.

பாலு: உங்களில் யாருக்கு என்ன என்ன யோசனை தோன்றுகிறதோ, சொல்லலாம். முதலில் நாடகத்தைத் தேர்ந்தெடுக்கலாம்!

கோவி: குசேலோபாக்யானம்!

ராமு: வேண்டாம், வேண்டாம். குசேலரைத் தேடிக் கண்டுபிடிப்பது கஷ்டம்.

கோபா: வீர ஹநுமான்!

ரகு: வேண்டாமடா, தம்பி! உனக்கு வால் வைக்க நான் எங்கே போவது?

சுந்த: ஏன், அவன்தான் இரட்டை வாலாகிவிட்டானே. ஹநுமான் வேஷத்துக்கு லாயக்குள்ளவன்தான். ஆனால் மூஞ்சி மட்டும் ரொம்ப நீண்டு போச்சு.

பாலு: கை கால் எல்லாம் கரடி மாதிரி இருக்கே!

கோபா: டேய், என்னைக் கேலி செய்ய ஆரம்பிச்சுட்டீங்களா? அப்புறம் நான் என்ன செய்வேன், தெரியுமா? நாடகமாவது, மண்ணாங்கட்டியாவது! நான் வரவில்லை. நீங்க நாடகம் போடறதை ஒரு கை பார்த்துவிடுகிறேன்.

(எழுந்து குதிக்கிறான்.)

சுந்த: சபாஷ்! வீர ஹநுமான் கடலைக் கடந்துவிட்டார்!

(கொல்லென்று சிரிப்பு.)

ரகு: (கை தட்டி) சத்தம் போடாதீர்கள். கோபாலனைக் கேலி செய்ய வேண்டாம். அவன் என்ன சொல்லிவிட்டான், கேலி செய்யும்படி?

(கோபாலனிடம் ஓடுகிறான்.)

ரகு: கோபாலா..அவர்கள் விளையாட்டாய் ஏதோ சொல்லிவிட்டார்கள். இனிமேல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

கோபாலன்: போங்கடா.. (திமிறிக்கொண்டு) எனக்கும் தெரியும்! ஆமாம்! உங்க நாடகத்தை ஒரு கை பார்க்கிறேன்.

ரகு: (கெஞ்சியபடி) போனால் போகிறது. எனக்காக மன்னித்துவிடு. வா....வந்து உட்காரு....

(இழுத்து வந்து உட்காரவைக்கிறான்.)

மூலையிலிருந்து குரல்: சீதையைக் கண்டு பிடித்தாகிவிட்டதா?

பாலு: (கோபத்துடன்) யார் இந்த மாதிரி அநாவசியமாகக் கூப்பாடு போடுகிறது? வீணுகக் கலாட்டா பண்ண நினைப்பவர்களுக்கு இங்கே இடம் கிடையாது; மரியாதையாய் எழுந்து போய்விடட்டும்.

ரகு: வேறே நாடகம் ஒருத்தருக்கும் தெரியலையா? எதாவது சமூக நாடகமாய்ப் போடலாமே!

விச்சு: கூடாது, கூடாது! அரிச்சந்திரா நாடகம்..!

ரகு: ஹூ ஹூம்.. சுடுகாட்டு விஷயங்களெல்லாம் வேண்டாம்.

பாலு: ருக்மாங்கத சரித்திரம்.

பல பேர்: கதையே பாதி பேருக்குத் தெரியாதே! அப்புறம் நாடகம் நடத்தறது எப்படி?

ரகு: லங்காதகனம்!

பாலு: சரியான பேர்! எனக்குச் சம்மதம்.

கோபா: எனக்கும் சம்மதம்.

(மற்றும் பலர் சம்மதம் தெரிவிக்கிறுர்கள்.)

சுந்த: (சிரிப்பை அடக்க வாயைப் பொத்தியபடி) அப்போதும் ஹநுமான் வேஷம் கோபாலனுக்கேதான்!

ராமு: எண்டா பரிகாசமாய்ச் சொல்லுகிருய்? அவன்தான் சற்று முன்னுல் நடித்தே காட்டிவிட்டானே. ஆகா! என்ன கோபம்! அப்படியே அனல் வீசித்தே, கண்கள் நெருப்புத் தணலாய்...

கோவி: ராவணன் எதிரிலிருந்திருந்தால் பஸ்மீகரமாகியிருப்பான்!

ரகு: உஸ்..ஸ்!

ராம: அதோ உட்கார்ந்திருக்கானே குண்டுமணி, ராவண வேஷத்துக்குப் பொருத்தமாக!

ரகு: லங்காதகன நாடகம் நிச்சயமாகிவிட்டது. அடுத்தபடியாக?

(ரகுவின் தகப்பனுர் உள்ளிருந்து வெளியே வருகிருர்.)

ர. த: அடுத்தபடியாக எல்லாரும் திண்ணையைக் காலி செய்ய வேண்டும்....சீ! கழுதைகளா! உங்கள் கொம்மாளத்திற்கு வேறு இடம் கிடைக்கவில்லையா? என்ன தலை வேதனை? போங்கடா!

[எல்லாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தபடி கீழே இறங்குகிருர்கள்.]

பாலு: அடே! நாளை இரண்டு மணிக்கு என் வீட்டுக்கு வந்து சேருங்கள். மேலே தொடரலாம்.

[எல்லாரும் போகிருர்கள்.]

தகப்பனுர்: (பையனைப் பார்த்து) ஏண்டா ஸ்கூலிலே பரீட்சை ரிசல்ட் என்னடா ஆச்சு?

பையன்: வீட்டிலே வந்த பிறகு சொல்றேம்பா.

தகப்: இங்கேயேதான் சொல்லேண்டா?

பையன்: (மெதுவாக) இங்கே ஒரே பிரம்பாக இருக்கிறதே..!

—P. M. ஷண்முகம்.

காட்சி 2

[சரியாக இரண்டு மணிக்கு எல்லாரும் வந்து சேர்கிருர்கள்.]

பாலு: நேற்றுக் கதை நிச்சயமாகிவிட்டது. அடுத்தபடியாக நடிகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ரகு: ஹநுமான் வேஷம் கோபாலனுக்கே இருக்கட்டும். பாலு சுக்ரீவன்.

பாலு: எனக்குச் சம்மதம்தான்; எந்த வேஷமானுலும் சரி. ராமர் வேஷத்துக்கு யார் இருக்கா?

ரகு: கோவிந்தனைப் போடலாம். (ஒரே சிரிப்பு.)

ரகு: என் சிரிப்பு?

சுந்த: கோவிந்தனை ராமன் வேஷத்தில் போட்டால், ராவணனுக்கு எங்கே போவது? கோவிந்தன் ராவணனுக இருக்கட்டும். ராமன் வேஷத்தை ரகு போட்டுக் கட்டும். என்ன, கோவிந்தன் இருக்கிற குண்டுக்கு ராவணன் வேஷம் அப்படியே பொருந்தும்.

கோவி: டேய், ராவணக் கோபம் சும்மா விடாது!

சுந்த: வீர ஹநுமானைக் கூப்பிடடா! வால் கோட்டை கட்டட்டும்... ஆமாம்... ராவண சாமி, சும்மா கிட.

பாலு: பார்த்தீங்களா? மீண்டும் சண்டைக்கு ஆரம்பிச்சுட்டீங்களா?

ரகு: கலாட்டா பண்ணமல் இருக்க மாட்டீங்களா? இப்பவே சண்டை போட்டால் அப்புறம் நாடகம் முடிவதற்குள் வெட்டுப் பழி, குத்துப்பழியாக வேண்டியது தான்!

சுந்த: சரி, இனிமேல் யாரும் அநாவசியமாகப் பேசக்கூடாது. காரியம் நடக்கட்டும்.

[வெகு சீக்கிரத்தில் மற்ற நடிகர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.]

பாலு: நம்ம ராமுவைச் சீதையாகப் போடலாம்.

ரகு: வேண்டவே வேண்டாம்! அடிச்சாக்கூட ராகம் போட்டு அழத் தெரியாது அவனுக்கு! அசோக வனத்திலே சீதை புலம்பற கட்டத்தைக் 'கத்தரிக்கோல்' வேலை செய்யச் சொல்கிறாயா?

ராமு: இந்தக் கதை வேண்டாம்!

கோபாலன்: இதை விட்டால் உருப்படியா என்ன கதை தெரியும்? நுனி தெரிஞ்சா, அடி தெரியாது.

பாலு: கிரீடம், துணி மணிகள், அந்த அந்த வேஷக்காரர்களே அவரவர் வீட்டிலிருந்து கொண்டு வர வேண்டும். தெரியுமா?

கோபா: நான் வாலுக்கு எங்கே போவேன்?

பாலு: இனிமேல் ஒத்திகை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

சுந்த: டேய், மாந்தோப்புக்குப் போயிடலாம். இங்கே ஒத்திகை நடத்தினால், பார்க்கறவங்க சிரிப்பாங்க!

ரகு: ஆமாம். நீ சொல்றது ஒரு விதத்திலே சரிதான். ஒத்திகை முடிஞ்சப்புறம் ஒரு நாள் டிராமா போட்டால், எங்க வீட்டிலேயிருந்து அம்மா, அப்பா கூட வருவாங்க.

கோவிந்: நான் வீட்டுக்குப் போகணும்.

சுந்தரம்: ராவணனுக்கு ஹநுமாரைக் கண்டு நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்பே நடுக்கம் போலிருக்கு!

கோவிந்: இந்த ஹநுமாரை இப்பவே நொறுக்கிடுவேன். ஒன்றும் பிரமாதமில்லை. இப்போ எங்கப்பாவுக்குத்தான் பயம்.

கோபா: பாத்துடலாமா?

ரகு: வேண்டாம், வேண்டாம். யுத்தம் இப்போதில்லை. நாடகம் ஆரம்பிக்கட்டும். மெதுவாக வைத்துக்கொள்ளலாம்.

[நடுவே புகுந்து சண்டைக்குத் தயாராயிருந்த அவர்களைச் சமாதானம் செய்து வைக்கிறான்.]

பாலு: நாலு மணிக்குத் தோப்புக்கு வந்துவிடுங்கள்.

எல்லாரும்: ஆல் ரைட்! குட் பை!

[எல்லாரும் போகிறார்கள்.]

காட்சி 3

[ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். தினந்தோறும் வழக்கமாக ஒத்திகை நடக்கும் இடம். ஒத்திகை நடந்துகொண்டிருக்கிறது.]

பாலு: போதும்...போதும்.

(பாடிக்கொண்டிருந்த கோவிந்தன் நிறுத்துகிறான்.)

ரகு: (தலையிலடித்துக் கொண்டு) ஐயோ கர்மமே!

கோவிந்தன்: என் பாட்டுக்கு என்ன குறைச்சல்?

பாலு: (வெளியிலே எட்டிப் பார்த்து) அப்பாடா நல்ல வேளை யாய்ப் பிழைச்சேன்!

ரகு: ஏன்?

பாலு: அதோ வண்ணான் வருகிறான். ஒரு வேளை கழுதை களைத் தேடுகிறானோ என்னவோ? கோவிந்தனின் பாட்டைக் கேட்டு இங்கே வந்திருந்தால்-?

கோவிந்தன்: உனக்குப் பாடத் தெரியுமா? இந்த ராகத்தை இது மாதிரிப் பாடி நான் கேட்ட தில்லே. எனக்கே எப்படி அமைந்ததென்று தெரியவில்லை. ஆகா..அற்புதம்!

ரகு: ஆகா.. இது மாதிரி யாரும் பாடினதேயில்லை என்று சத்தியம் செய்வேன்..நாடகத் திலே கல்லு வந்து விழாமல் தப்பித்துக்கொள்ளணும்!

பாலு: நேற்று வசனத்தைக் கொடுத்துப் பேசுடா என்று கோபா லனைச் சொன்னால் பாடம் ஒப் பிக்கிற மாதிரி பேசறான். இன்று கோவிந்தன் பாடின பாட்டு கழு தைக்குக்கூடக் கோபம் வந்துடும் போலிருக்கு. (சிரிக்கிறான்.)

கோவிந்: அப்படி இளக்கார மாகப் பேசாதீங்க. நான் நாடகத் திலிருந்து விலகிக்கொள்கிறேன்.

[கோபத்துடன் எழுந்து செல் கிறான். அவன் பின்னால் சமா தானம் செய்ய, பாலுவும் ரகுவும் ஓடுகிறார்கள்.]

காட்சி 4

[ஒரு மாதத்துக்குப் பிறகு நாட கம் போடும் தேதி நிச்சயமாயிற்று. பாலு வீட்டு மாடியில் 5 மணிக்கு நாடகம் நடிக்கப்படும் என்றும் அறிவித்துவிட்டார்கள். டிக்கட் டுக்கூடக் காலணா, அரையணா வசூலித்து விட்டார்கள். இரண்டு மணியாகியும் சில முக்கிய நடிகர் கள் வரவில்லை. வாசலுக்கும் உள் ளுக்கும் நடை போடுகிறார்கள் பாலுவும் ரகுவும்.]

பாலு: கோபாலனைக் காண வில்லையே! நேத்திக்குக்கூட வந்திருந்தான்.

ரகு: கோவிந்தனாவது வரக் கூடாதா?

(சுந்தரம் வருகிறான்.)

சுந்த: கோபாலன் வரவில்லை யாம். மரத்தின்மீது உட்கார்ந் திருக்கும்போது, நேத்திக்கு அவனை எல்லோரும் கேலி பண்ணி னாங்களாம்.

"ஆஞ்சனேயக் குரங்கே!
மரத்தை விட்டு இறங்கே(ன்)!"
என்று கேலி செய்தார்கள்!

பாலு: அடபாவமே! இப்படியா கடைசியில் தலையிலே கையை வைக்கவேண்டும்!

ரகு: போனால் போகிறது. சுந்தரத்தை அவன் வேஷத்தில் போட்டுக்கலாம்.

சுந்த: நான் அங்கதன் வேஷம் போட்டுக்கறவனுச்சே?

பாலு: அங்கதனும் குரங்கு, ஹநுமாரும் குரங்கு. இரண்டுக்கும் நீயே இருந்துடு.

[அப்போது ஒரு சீட்டுடன் அங்கே ஒரு பையன் வருகிறான்.]

ரகு: என்னடா சீட்டு!

பையன்: கோவிந்தண்ணாவுக்கு நாடகத்தக்கு வர இஷ்டமில்லை யாம். ராமன் வேஷம் கொடுக்கா விட்டால் வரமாட்டேன்னு எழுதி யிருக்கான்.

ரகு: கஷ்டம்...கஷ்டம்! இப்படியா முடியணும்!

பாலு: ராவணனும் ஹநுமாரும் இல்லாத 'லங்காதகனம்' நடக்கிற காரியமில்லே. இப்போது என்ன செய்வது?

ரகு: அப்போதே எனக்குத் தெரியும்! அதுக்குத்தான் சமூக நாடகம் போடலாம் என்று சொன்னேன். இவங்க மண் குதிரை.

பாலு: நான் மட்டும் என்ன செய்வது? எல்லாவற்றுக்கும் நாம்ப இருவருந்தான் பொறுப்பாளி.

சுந்த: ரகு, உன் தங்கை சுசீலா வருகிறாள்.

ரகு: என், சுசீலா?

சுசீலா: அப்பா உன்னைக் கூப்பிடரு. உன் இங்கிலீஷ் வாத்தியார் வந்திருக்கார். அப்பா ரொம்பக் கோபமாய் இருக்கார்.

பாலு, ரகு: அட பகவானே!

(வானத்தைப் பார்க்கிறார்கள்.)

சுந்த: இப்போது என்ன செய்வது?

ரகு: நான் ஒரு தந்திரம் சொல்லுகிறேன். நாடகம் என்னவோ நடக்காது. ஒரு போர்டு கொண்டு வா!

பாலு: எதற்கு?

ரகு: 'நாடகத்தில் சில அம்சங்கள் மூலக் கதைக்கு விரோதமாக இருப்பதால் சர்க்கார் நாடகத்தைத் தடை செய்துவிட்டார்கள்' —சரிதானா?

பாலு: சபாஷ்!

ரகு: நான் வருகிறேன். நல்ல நாடகம்!

(திரை)

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) **'மூட்டை'**



பேசும் சினிமா   புரொபஸர் விஞ்ஞானம்

4
நம்முடைய கண்ணுக்கு ஓர் அற்புதமான சக்தி இருக்கிறது. ஒரு விநாடியில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு நேரமே தோன்றும் மின்சாரப் பொறியையும் பார்த்துவிடும். பார்த்த பொறி மறைந்தபின்பும்
கண்ணிலிருந்து மறையக் கொஞ்சம் நேரம் பிடிக்கிறது. அதாவது சுமார் ஒரு வினாடியில் பத்தில் ஒரு பங்கு நேரத்தில்தான் மறைகிறது. அதற்குள் இன்னொரு பொறி தோன்றினால் முதலில் தென்பட்ட பொறி மறைந்து இன்னொன்று தென்பட்டதாகவே பார்வைக்குத் தோன்றாது. ஒன்றே தொடர்ந்து தெரிவதாகத்தான் தோன்றும். கையில் ஒரு கம்பி மத்தாப்பை வைத்துக்கொண்டு வேகமாகச் சுற்றுவதைப் பார்த்தால் ஒரு நெருப்பு வளையம்போல் தோன்றுகிறது.
5
ஒலி சினிமாப் படங்கள்
6
பழைய சினிமா இயந்திரம்
தற்கால சினிமா இயந்திரம்

ஆகையால்தான் கூண்டுக்குள் கிளி இருப்பதாகக் கண்ணுக்குத் தோன்றுகிறது. கண் ஏமாந்துபோகிறது என்று கூடச் சொல்லலாம். இந்தத் தத்துவத்தைக் கொண்டுதான் விஞ்ஞானிகள் சினிமாவை அமைத்தார்கள். தொடர்ந்து நடக்கும் ஒரு நிகழ்ச்சியைப் படம் பிடிக்கும்போது வினாடிக்குப் பதினாறு படம் வீதம் படம் பிடித்துவிடுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு படத்தையும் பிடிப்பதற்கான நேரம் ஒரு வினாடியில் லட்சத்தில் ஒரு பங்கு. ஆகையால் ஒவ்வொரு படமும் தெளிவாக விழுகிறது., நாம் சினிமா பார்க்கும்போது விநாடிக்குப் பதினாறு படம் வீதம் பார்த்தால் நடப்பது தொடர்ச்சியாகத் தெரிகிறது.



டெலிபோனில் ஒலியின் அலைகள் மின்சார ஓட்டமாக மாறி கம்பி வழியாகச் சென்று மீண்டும் ஒலி அலைகளாக மாறுவது உனக்குத் தெரியும் அல்லவா? பேசும் சினிமாவில் ஒலியின் அதிர்ச்சியை ஒளி அதிர்ச்சியாக (ஒளி மின்சார வால்வு) போட்டோ எலெக்டிரிக் ஸெல் என்ற கருவியின் உதவியால் மாற்றுகிறார்கள். இந்த ஒளி அதிர்ச்சிகளைப் படம் பிடிக்கிறார்கள். சினிமாப் படத்தையும், பேச்சின் ஒளிப் படத்தையும் ஒரே பிலிம் சுருளில் சரியாகப் பொருத்துகிறார்கள். சினிமா படத்தைக் காட்டும்போது ஒளிப்பதிவு தக்க கருவியின் மூலமாக ஒலியாக மாறி நமக்குக் கேட்கிறது. ஒளிப்பதிவுப் படங்களை சாதாரணமாக பிலிம் சுருளில் ஒரு பக்கத்தில் கோடுபோல் இருப்பதைக் காணலாம். காட்சியையும் ஒளியையும் ஒரே சமயத்தில் படம் எடுப்பார்கள். ஆனால் அப்படங்கள் தனித்தனியாக எடுக்கப்படும். பிறகுதான் இந்த இரண்டு படங்களையும் ஒரே சுருளில் பொருத்திப் பதிவு செய்வார்கள். இதிலே ஒரு விசித்திரம். ஒலிப்பதிவுப் படம் காட்சிப் படத்துக்குச் சற்றே முன்பாக வைத்துப் பொருத்தப்படும். அப்படிப் பொருத்தினால்தான் சினிமா படத்தைப் பார்ப்பவருக்கு, பேச்சும் நிகழ்ச்சியும் ஒரே சமயத்தில் நிகழ்வதுபோல் இருக்கும்.



போட்டோஎலக்டிரிக் ஸெல்

ஒருவர் அன்று. பல பேர் பல காலத்தில் பல தேசங்களில் முயன்றதால்தான் இன்றுள்ள பேசும்சினிமா உருப்பெற்றிருக்கிறது.

15-ஆம் நூற்றுண்டில் இத்தாலியில் வாழ்ந்த லியனர்டோ டாவின்சி என்ற பேரறிஞர் கண்ணின் விசித்திர இயல்பை அறிந்து வெளியிட்டார். ஸர்ஜான் ஹெர்ஷெல் என்னும் நிபுணர் அந்தக் கிளியும்கூண்டும் என்ற விளையாட்டுக் கருவியின் தத்துவத்தைக் கண்டுபிடித்தார். படம் பிடிக்கும் துறையில் பலர் முயன்று ஸெலுலாயிடு பிலிம் சுருளில் படம் பிடிப்பதற்கும் இமைக்குமுன் படம் பிடிப்பதற்கும் முயன்ருர்கள். இதற்குப் பிறகு லண்டனில் உள்ள பிரீஸ்கிரீன் என்பவர் ஒரு நாள், ஒன்றில் ஒருவன் தூங்குவதுபோலவும் மற்றென்றில் அதே ஆள் விழித்திருப்பதுபோலவும் உள்ள இரண்டு படங்களை வைத்திருந்தார் ஒரு கண்ணைமூடிக்கொண்டு மற்றென்றை இடுக்கிக்கொண்டும் இரண்டு படங்களையும் விரைவாக மாறி மாறிப் பார்த்தபோது அந்த மனிதன் கண்ணைத் திறந்து மூடுவதுபோல் தோன்றிற்று. இதிலிருந்துதான் சினிமா படத்தைக் காட்டும் வழி உதயமாயிற்று. பின்பு ரேனோ என்ற பிரெஞ்சுக்காரர் 150 அடிகள் உள்ள தொடர்ச்சியான படங்களை வரைந்து மாஜிக் லாண்டேர்ன் மூலமாகச் சினிமா காட்டினர். எடிஸன் முதலியோரின் முயற்சியால் இது மேன் மேலும் வளர்ந்து இப்பொழுதுள்ள நிலையை அடைந்துவிட்டது.

எடிஸன்

ஸர்ஜான் ஹெர்ஷெல்

லியனர்டோ டாவின்சி.

நீச்சல் பழக்கம்

அபாயம்; ஜாக்கிரதை!

1. வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு நீந்தாதே.

2. பரந்த நீர்நிலைகளில் துணையின்றி வெகுதூரம் நீச்சலடிக்காதே.

3. பந்தோபஸ்து இல்லாத நீர்நிலைகளில் காற்றடைத்த ரப்பர் டியூப் முதலிய போலி ஆதாரங்களை வைத்துக்கொண்டு நீந்தாதே.

4. வெடவெடவென்று நடுக்கும் குளிரில் நீந்தாதே.

5. ஆறு, ஓடை முதலியவற்றில் எதிர்நீச்சுப் போடாதே.

6. தடுக்கும்படி ஆடைகளை உடுத்துக்கொண்டு நீந்தாதே.

7. புதிய இடங்களில் போய் முன்பின் தெரியாமல் நீந்தாதே.

மிதத்தல் (தொடர்ச்சி)

நீச்சல் ஒரு தேகப் பயிற்சி. ஆபத்துக் காலத்தில் உதவக்கூடியது. ஆகவே பெரியவர்கள் உதவியுடன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

★



1. முதலில் கைகளால் பிடித்துக்கொண்டு காலால் கரையை உதைந்துகொண்டால் துள்ளி விழச் சௌகரியமாய் இருக்கும்.

2. தண்ணீரில் பாயும்போது கைகள் முன்னால் நீட்டியிருத்தல் அவசியம். தலையில் அடிபடாமல் தடுக்க உதவுவதுடன் மூக்கிலும் தண்ணீர் ஏறாமல் இருக்கும்.

3. மல்லாந்து நீந்தும்போது தோன்றுகிற மூன்று நிலைகள். படத்தில் காட்டியபடி கைகளையும் கால்களையும் வைத்துக்கொண்டு நீந்தப் பழக வேண்டும்.

★

4. நீந்திக்கொண்டே போகும் போது திரும்ப வேண்டியிருந்தால் முதலில் செங்குத்தாக உடலைக் கொண்டுவர வேண்டும்.



★

5. திரும்பும்போது கால்கள் மடங்கி யிருப்பதையும் கை மட்டும் தண்ணீரில் திரும்பு வதையும் கவனிக்கவேண்டும்.



6. திரும்பிய பிறகு உடல் இருக்க வேண்டிய இரண்டு நிலைகள். கண்களை மூடிக்கொண்டும் இருக்கலாம். திறந்தும் இருக்கலாம். ஆனால் மூச்சைக் கெட்டியாக அடக்கிக்கொள்ள வேண்டும்.

★

7. தண்ணீருக்குள்ளேயே மல்லாந்தபடி முன்னேறிச் செல்லும் போது கால்களும் கைகளும் சேர்ந்து இயங்கவேண்டும். மடக்கியிருந்தாலும் நீட்டியிருந்தாலும் சேர்ந்தே இருக்கவேண்டும். கால் கைகள் தாறுமாறாக இயங்கினால் எளிதில் களைத்துப் போகும். மூச்சும் நிற்காது.

3/1784

★



8. கையையும் காலையும் முறையாக மாற்றிப் போட்டால் நீந்துவது சுலபம்; விரைவாகவும் நீந்தலாம். பார்ப்பதற்கும் அழகாக இருக்கும்.

கேட்டீர்களா!

சிறுவர் பாதுகாப்புப் படை

பள்ளியில் பயிலும் மாணவர் மாணவிகள் சேர்ந்து அமெரிக்காவில் ஒரு பாதுகாப்புப் படை நிறுவியிருக்கிறார்கள். அதில் சேர்ந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை $5\frac{1}{2}$ லட்சம். இதேபோல் கண்ணன் கழகத்துக் குழந்தைகளும் ஊருக்கு ஊர் ஒரு பாதுகாப்புப் படை நிறுவலாம். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வழி காட்டுவது, விளையாட்டுகள் நடத்துவது, ஆபத்துக் காலத்தில் முதல் உதவி செய்வது, தேர் திருவிழாக் காலங்களில் சிறுவர்களைப் பாதுகாப்பது முதலிய திட்டங்களுடன் வேலை தொடங்கலாம்.

எகிப்து மன்னர்

எகிப்து மன்னர் பரூக் கட்டாயத்தின் பேரில் தம் அரச பதவியைத் துறந்தார். அவருடைய ஏழு மாதக் குழந்தைதான் எகிப்து, சூடான் மன்னர் என்று பிரகடனம் ஆகியிருக்கிறது.

அமெரிக்கத் தேர்தல்

வரப்போகும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு பிரமுகர்கள் நிற்கிறார்கள். குடியரசுக் கட்சி அபேட்சகர் ஜெனரல் ஐஸன்ஹோவரும் ஜனநாயகக் கட்சி அபேட்சகர் கவர்னர் அட்லாய் ஸ்டிவன்ஸனும்தான் போட்டியிடுகிறவர்கள். தற்போதுள்ள ஜனாதிபதியின் கட்சியே ஜனநாயகக் கட்சி. இந்தக் கட்சியினர்தான் சுமார் 20 வருஷங்களாக அதிகார பதவியிலிருந்து வருகிறது.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு அரண்மனை

இக்ஷ்வாகு வம்சத்து அரசனால் கட்டப்பட்ட அரண்மனை ஒன்றை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். குண்டூர் ஜில்லா நகருளகொண்டா என்ற ஊரில் பூமிக்கடியிலிருந்து இதைப் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினர் வெட்டிக் கண்டு பிடித்தனர். அரண்மனையின் மேல்புறம் வேலைப்பாடுகள் கொண்ட பளிங்குக் கண்ணாடிகள் காணப்பட்டன. கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் ஆண்ட சாதவாகன அரசர்கள் காலத்தைச் சேர்ந்த பானைகளும் அங்கே காணப்படுகின்றன.

ஒலிம்பிக் ஹாக்கியில் இந்தியா வெற்றி

1948-ஆம் வருஷத்திலிருந்து ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் இந்தியாவே வெற்றி பெற்று வந்திருக்கிறது. இந்த வருஷமும் இந்தியா ஹாலந்துக் கோஷ்டியுடன் இறுதி மாட்சில் விளையாடி இணையற்ற வெற்றி பெற்றது.

புதிய காலண்டர்

ஒவ்வொரு வருஷமும் நாம் புதுக் காலண்டர்கள் தயாரித்து உபயோகிக்கிறோம். ஆனால் இப்போது ஓர் அமெரிக்கர் ஒரு புது முறையான காலண்டர் தயாரித்திருக்கிறார். இதை நிரந்தரமாக வைத்துக் கொள்ளலாம். எல்லா வருஷங்களுக்கும் பயன்படும் முறையில் இதை அவர் தயாரித்திருக்கிறார். அவர் இந்த நிரந்தரக் காலண்டருடன் இப்போது பம்பாய் வந்திருக்கிறார்.

மதுரைக் கூட்டம்

அன்பார்ந்த ஆசிரியர் அவர்களே! வணக்கம்.

மதுரையில் நடந்த கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் நானும் ஒருவன். கூட்டம் இவ்வளவு ஜோராய் இருக்கும் என்று நான் எண்ணவே யில்லை. என் சிநேகிதர்கள் என்னைப் பரிகாசம் செய்தார்கள். கூட்டமாவது குழப்பமாவது என்று நையாண்டி செய்தார்கள். ஆனால் அவர்கள் வெளிவாசலில் நின்றுகொண்டு பார்த்ததும் உள்ளே வர ஆசைப்பட்டார்கள். 'ஸ்கௌட்' உள்ளே விட்டால்தானே! உள்ளே ஜிலேபி, வாழைப் பழம், மிக்சர், ஆரஞ்சு கிரஷ் இதெல்லாம் சாப்பிடுவதைப் பார்த்த அவர்கள் என்ன நினைத்தார்களோ! விளையாட்டில் பரிசைத் தட்டிக்கொண்டு போனவர்களைப் பார்த்து அவர்கள் என்ன எண்ணினார்களோ! வெளியே நான் பாரி மிட்டாய்ப் பொட்டலத்துடன் வந்தபோது, பாவம், அவர்கள் வெளியில் பரிதாபப்படும் படியாக நின்றுகொண் டிருந்தார்கள். போனால் போகட்டும் என்று அவர்களுக்கு நாலு மிட்டாய்களைக் கொடுத்துவிட்டு வந்தேன். அவர்கள் இரண்டு பேரும் கண்ணன் கழகத்தில் சேரவேண்டுமாம். கூப்பன் அனுப்பியிருக்கிறார்கள்.

—கே. கிருஷ்ணன், K. 497—மதுரை.

* * * *

நன்றி

அண்ணா!

மதுரைக் கூட்டம் மகா அற்புதம். ஆர்வி அண்ணா பேசினது அருமையாய் இருந்தது. தலைமை வகித்த ஸ்ரீ ஏ. வைத்தியநாதையர் பேசினது ஏ. 1–ஆக இருந்தது. ஸ்ரீ கி. வா. ஜ. பேச்சு கிராண்டாக இருந்தது. எங்கள் ஊருக்கு வந்து இவ்வளவு சிறப்பான கூட்டம் நடத்தினதற்கு எங்கள் ஊர்ப் பையன்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

S. கணபதி—மதுரை.

* * *

ஆரம்ப விழா

ஆதிகுடியில் 29-6-52 அன்று மாலை 5 மணிக்கு, கதாசிரியர் ஸ்ரீ ஜி. எஸ். மணி அவர்கள் தலைமையில் கண்ணன் கிளைக் கழக ஆரம்ப விழா நடந்தேறியது. உபதலைவர், பொருளாளர், செயலாளர் எல்லாரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கிரிக்கெட் கோபாலன்

ஒரு நாள் மாலை நேரத்திலே
ஒரு புல்வெளி மைதானத்திலே
சிறுவர் களெல்லாம் ஒன்று கூடி
சேர்ந்தே ஆடினர் கிரிக்கெட்டு.
பந்தை வீசினான் கோபாலன்.
பாட்டால் அடித்தான் செல்வமணி
வந்து பிடித்தான் ஒரு பையன்.
விழித்தே போனான் அடித்தவனும்.
சிக்ஸர் அடித்தான் சிங்காரம்
சிரித்தார் கைதட்டி எல்லாரும்!
விக்கட் போட்டான் கோபாலன்
ஓடி ஒளிந்தான் சிங்காரம்.
அடுத்தவன் ஆடத் துவங்கினான்
அவனிடம் எறிந்தான் கோபாலன்
தடுத்தவன் பந்தைத் தட்டினதும்
டக்கெனப் பிடித்தான் சுப்புணியும்.
ஒருவர் பின்னே ஒருவரென
உடனே அவுட்டும் ஆனதினால்
கோபு செய்த போலிங்கால்
கொண்டோம் வெற்றி என்றார்கள்.
அன்றி லிருந்தே கோபாலன்
அற்புத போலர் ஆனானே!
இன்றும் அவன்தன் பெயர்தானே
கிரிக்கெட் கோபா லன்தானே!

—கோ. கந்தசாமி, சென்னை-4.

* * * *

ஆட்டுக் கொட்டில்கள்



மேலேயுள்ள படம் ஒரு குடியானவனுடைய ஆட்டுக் கொட்டிலைக் குறிக்கிறது. பதின்மூன்று நெருப்புக் குச்சிகளால் ஆறு சம அள வுள்ள கொட்டில்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு குச்சி திருட்டுப் போய்விட்டது. ஆனால் குடியானவன் மீதி 12 குச்சி களைக் கொண்டே முன் மாதிரி சம அளவுள்ள ஆறு கொட்டில்களை அமைத்தான். எங்கே, உங்களால் 12 குச்சிகளைக் கொண்டு ஆறு கொட்டில்கள் அமைக்க முடிகிறதா, முயலுங்கள்!

(விடை எதிர்ப் பக்கத்தில்)

நான் நினைக்கிறேன்

செங்கடல் தண்ணீரெல்லாம் சிவப்பு நிறமாகவும் கருங்கடல் தண்ணீரெல்லாம் கறுப்பு நிறமாகவும் இருக்குமோ!

—N. சுப்பு, மயிலாப்பூர்.

* * * *

நான் யார்?

சிப்பியில் உண்டு, முத்தில் இல்லை.
ரதத்தில் உண்டு, வடத்தில் இல்லை.
பஞ்சில் உண்டு, நூலில் இல்லை.
சீடையில் உண்டு, முறுக்கில் இல்லை.
விதியில் உண்டு, மதியில் இல்லை.

P. S. நாராயணன், சென்னை-4.

விடை:— [illegible]

* * * *

பாராட்டுகிறேன்

'கண்ணன்' ஆசிரியர் அவர்களுக்கு.

நமஸ்காரம். குழந்தைகளே அன்றிப் பெரியவர்களும் விரும்பிப் படிப்பதும், சிறுவர்களின் உள்ளத்தைப் பிரதிபலிப்பதுமான பல விஷயங்கள் அடங்கியுள்ள தங்கள் 'கண்ணன்' பத்திரிகையின் மூலம் தமிழுக்கும் குழந்தைகளுக்கும் செய்துவரும் அரிய சேவையை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தங்கள் பத்திரிகை சிறுவர்களின் அறிவாற்றலைத் தூண்ட எவ்வளவு தூரம் உதவுகிறது என்பது நன்றாகப் புலனாகிறது.

தங்கள் அன்பும் ஆசியும் எல்லாச் சிறுவர்களுக்கும் இருக்க வேண்டுகிறேன்.

நமஸ்காரம்.

எஸ். ராதாகிருஷ்ணன், பி. எஸ்ஸி. அஸிஸ்டெண்ட் பாக்டரி சூப்பரிண்டென்ட், சுகர் பாக்டரி, புகளூர்.

* * * *

விடை: ஆட்டுக் கொட்டில்கள்



கொரியாச் சண்டை

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். இங்கே எனக்கும் என்னுடைய நண்பனுக்கும் கொரியாச் சண்டை ஆரம்பித்திருக்கிறது. கொரியாச் சண்டை என்றவுடன் 'ஐயோ' என்று வாயைப் பிளக்காதீர்கள்! நான் கண்ணன் கட்டாயம் மாதமிருமுறை வெளிவரும் என்றேன். என் நண்பன் கண்ணன் மாதம் ஒரு முறைதான் வெளிவரும் என்றான். ரூபாய் மூன்று பந்தயம்கூட வைத்திருக்கிறோம். அண்ணா, நான் வெற்றியடைந்தால் பந்தயப் பணம் ரூபாய் மூன்றையும் கண்ணன் சந்தாவுக்கு அனுப்பிவிடுவேன். யாருக்கு வெற்றி? இப்பொழுது சொல்லுங்கள்.

—மூர்த்தி, (K. 258), தூத்துக்குடி.

[வெற்றி உன் நண்பனுக்குத்தான்! ஆ-ர்.]

பொழுதுபோக்கு விடைகள்:

இ. வ. 1. ஆ. 2. கதிரவன். 6. திலகம். 7. சைவம். 9. புடவை. 11. கடா. 12. அவந்தி. 16. ஆண். 18. காவடி. 20. கப்பல். 22. உதடு. 24. கவி. 28. தந்தை. 29. இமயமலை. 31. கைதி. 32. விலைமதிப்பு.

மே. கீ 1. ஆதிபகவன். 2. நாகம். 4. திசை. 5. வம்பு. 8. சுவை. 10. மண்டபம். 13. வண்டி. 14. தியாகம். 15 மகாநாடு. 17. ஆல். 19. வழி. 22. உதகை. 24. கமலை. 25. வியப்பு. 26. தலைவி. 27. அன்பு. 30. மதி.

கிருஷ்ணன் வேஷம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
சென்னை-600 008

நான்கே வயதான குழந்தை கற்பகவாணி அடிக்கடி இது மாதிரி கிருஷ்ணன் வேஷம் போட்டுக்கொண்டு காட்சியளிக்கிறாள். பார்த்தால் வேஷம் போலவா இருக்கிறது? அசல் கிருஷ்ணன் மாதிரியே இல்லை? அந்தக் குழந்தைக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் கிருஷ்ண பகவானே அருள வாழ்த்துகிறோம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கேட்டீர்களா!

கிரிக்கெட் புலி ஹனீப் முகம்மது

பார்க்கப் போனால் வயது பதினேழுதான் ஆகிறது. அடடா, என்ன அடி அடிக்கிறான், தெரியுமா? சக்கைப் போடுதான். ஒரு பந்தை யாவது தவற விடுவதில்லை! எதிரே உலகப் புகழ் பெற்ற சிங்கமே வந்து பௌல் செய்யட்டுமே. பாகிஸ்தானைச் சேர்ந்த ஹனீப் கொஞ்சமாவது லட்சியம் செய்ய வேண்டுமே. தன் ஆட்டத்திலேயே கண்ணாக இருந்து பந்தை அடிக்கிறான். இந்தப் போக்கில் அடித்து முன்னேறிக்கொண் டிருந்தால் சீக்கிரத்திலேயே உலக ஆட்டக்காரரில் ஒருவனாக வந்துவிடுவான் என்பது நிச்சயம்!

அதிசயப் பெண்

குடகு நாட்டில் மெர்க்காரா என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கேதான் இந்த அதிசயப் பெண் இருக்கிறாள். பதினேழு வயதான இவளுடைய பெயர் தனலக்ஷ்மி என்பது இவள் மாதக் கணக்கில் சாப்பிடாமலே இருந்து வருகிறாள். பசியே எடுப்பதில்லையாம் இவளுக்கு. ஆனால் வீட்டுக் காரியங்களை யெல்லாம் முக மலர்ச்சியுடன் செய்கிறாள். இப்படிச் சாப்பிடாமலே இருக்கிறாளே என்று கவலைப்பட்டு ஆகாரத்தைக் கொடுத்தால் உடனே அதை வாந்தி எடுத்துவிடுகிறாள். பல வைத்தியர் இவளைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். எல்லாருக்கும் இவள் உடல் நிலை ஒரு பெரிய புதிராக இருக்கிறது. நமக்குப் புதிராக மட்டுமல்ல; அதிசயமாகவும் இருக்கிறது.

நோபெல் பரிசு

1952-ஆம் வருஷத்து இலக்கியப் பரிசு பிராங்காய் மௌரியாக் என்ற பிரெஞ்சு நாவலாசிரியருக்குக் கிடைத்துள்ளது. இந்தியாவில் நோபெல் பரிசு பெற்ற அறிஞர்கள் இருவர். ஒருவர் கவியரசர் ரவீந்திரநாத டாகுர். இவருடைய கீதாஞ்சலி என்ற கவிதைத் தொகுப்பைப் பாராட்டி அளித்த இலக்கியப் பரிசு இது. இன்னொருவர் தென்னிந்தியரான சர் சந்திரசேகர வேங்கடராமன் ஆவார் ‘ஒளிக் கிரணம்’ என்ற புதிய விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்ததற்காக அளித்த விஞ்ஞானப் பரிசு.

நேருவின் பிறந்த நாள்

நவம்பர் மாதம் 14-தேதிதான் நம் இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவின் பிறந்த நாள். அந்த நாளை நாடெங்கும் கொண்டாடினார்கள். பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது எல்லாரும் அவருக்குப் பரிசுகள் அனுப்புவது வழக்கம். ஆனால் நேரு என்ன செய்தார் தெரியுமா? யாரும் கண்டிப்பாகத் தமக்குப் பரிசுகள் அனுப்பக் கூடாது என்று அறிவித்துவிட்டார். அந்தப் பரிசுகள் அனுப்புவதற்குப் பதில் சிறுவர்களுக்கே ஏதாவது சந்தோஷமாகச் செலவிடுங்கள் என்று கூறிவிட்டார். அவரே டில்லியிலுள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் கூடியிருந்த கூட்டத்துக்கு வந்து அவர்களோடு அன்று குதூகலமாக ஆடி விளையாடிக் களித்தார். ஆமாம்; நேருவுக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை!

21784

யுகிவாரிஸு

"யுகிவாரிஸு என்ற ஜப்பானியப் படத்தைக் காண்பிக்கப் போகிறோம். நீங்கள் அவசியம் வரவேண்டும்" என்று போன் வந்தது. இதென்ன, வாயில் நுழையாத பெயராக இருக்கிறதே என்று முதலில் தோன்றியது. பிறகுதான் இது சர்வ தேச பிலிம் விழாவின்போது சென்னைக்கு வந்த படம் என்பது ஞாபகத்துக்கு வந்தது. எனவே போய்ப் பார்த்துவிட வேண்டியதுதான் என்று புறப்பட்டேன். படம் பார்த்த அந்த இரண்டு மணி நேரமும் நான் தியேட்டரிலேயே இல்லை. கதை நிகழ்ந்த ஜப்பான் நாட்டிலேயே இருந்தேன். படம் முடிந்த பிறகு தான், ஆகா, இது தியேட்டர் அல்லவா என்ற ஞாபகம் வந்தது.

படத்தில் பிரதான பாகத்தில், நடித்தவர் யார் தெரியுமா? நாலே நாலு வயதுள்ள ஒரு ஜப்பானியச் சிறுவன் தான். படத்திலேயே மொத்தம் நாலு பேரைத்தான் நாம் பார்க்கிறோம். படத்தில் ஜப்பானியச் சிறுவர்களின் ஒழுங்கான முறையைப் பார்க்கிறோம். களங்கமற்ற பேச்சு, சிரிப்பு, தைரியம், விளையாட்டு, அஞ்சாத நெஞ்சம் எல்லாவற்றையும் அந்தச் சிறுவன் மூலம் பார்க்கிறோம்.

அவன் தாய் சீக்காளி; அவனை, அவன் சிற்றன்னையின் வீட்டுக்குப் போய் இருக்கச் சொல்கிறாள். அவன் தந்தையும் சிற்றன்னையும் அவனைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பி அவள் ஆஸ்பத்திரியில் சேரப் போய்விடுகிறாள். தன் கணவனுக்கு இன்னொரு மனைவி மூலம் இப்படி ஒரு குழந்தை உண்டு என்பது அந்தச் சிற்றன்னைக்குத் தெரியாது. கணவன் தனக்குத் துரோகம் செய்துவிட்டான் என்று சிறுவனிடம் வெறுப்புக்கொள்ள முயலுகிறாள். ஆனால் சிறுவனின் பேச்சும் விளையாட்டும் அவளைக் கவர்ந்துவிடுகின்றன. பிறகு அவன் தந்தை யுத்தத்திலிருந்து திரும்பி வருகிறார். வந்ததும் கணவனிடம் மனைவி கோபித்துக் கொள்கிறாள். இதைப் பார்த்த சிறுவன் தன்னால்தானே இவர்களுக்குள் சண்டை என்று எண்ணி, ரெயில்பாதை வழியாகத் தாயிடம் போகப் புறப்படுகிறான். பின்னால் ரெயில் வருகிறது. அவனோ திரும்பிப் பார்க்காமல் நடக்கிறான். முட்டித் தள்ளும் சமயம். அவனையும் பின்னாலேயே வந்த சிற்றன்னையையும் தந்தை ஓடிவந்து காப்பாற்றுகிறார். பிறகு சந்தோஷமாக இருக்கிறார்கள். கதைச் சுருக்கம் இதுதான்.

அன்று என்னோடு பல சிறுவர் சிறுமியரும் படத்தைப் பார்த்தார்கள். ஜப்பானிய மிருகக் காட்சிச் சாலையைக் காட்டும்போதும், விளையாட்டுச் சாமான்கள் பின்னணிச் சங்கீதத்துடன் நாட்டியமாடும் போதும் அந்தச் சிறுவன் கோபித்துக் கொள்ளும்போதும் தியேட்டரே அதிரும்படி ஒரே சிரிப்புத்தான். சாதாரணமான ஒரு கதையை நாலே வயதான சிறுவனை வைத்துக்கொண்டு அற்புதமான படமாக ஜப்பானியர்கள் எடுத்திருக்கிறார்கள்.

குழந்தைகளோடு பெற்றோரும் மற்றவர்களும் அவசியம் பார்க்க வேண்டிய படம் இது என்று எண்ணிக்கொண்டே திரும்பினேன்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

13. கருகாம்பாளையம்
- உபதலைவர்: K.S. ஆறுமுகம்.
- பொருளாளர்: K.K. சுப்பிரமணியன்.
- செயலாளர்: K.C. ராசியண்ணன்.
- வாசகசாலை நிர்வாகி: K.C. ராசியண்ணன்.

இருபது பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

14. நரிக்கால்பட்டி
- உபதலைவர்: மு. சிக்கந்தர் பாஷா.
- பொருளாளர்: ஜி. துரைசாமி (D.252)
- செயலாளர்: நா. சையத் இப்ராஹிம்.

ஒன்பது பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'அறிவுக் கதிர்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

15. சியாத்தமங்கை திருமருகல் (P.O.)
- உபதலைவர்: V. வீராசாமி.
- பொருளாளர்: V. தண்டபாணி.
- செயலாளர்: C. பாலசுப்பிரமணியன்.
- 'சுடர்' ஆசிரியர்: G. ஜயராமன்.
- ஓவியர்: G.V. ரமணி.

பத்துப்பேர் கொண்ட செயற்குழுவும் 'சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

16. குடியாத்தம் II
- உபதலைவர்: T.K. ராமமூர்த்தி (R.429)
- பொருளாளர்: K. மூர்த்தி
- செயலாளர்: T.S. ராதாகிருஷ்ணன்.
- வாசகசாலை நிர்வாகி: சுப்பிரமணியன்.

பத்துப்பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

* * *

திருவல்லிக்கேணி, கண்ணன் கிளைக் கழகம் (ஆண்கள் பகுதி) 20, சாமி பிள்ளைத் தெருவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

வேலூரில்: கண்ணன் கிளைக் கழகம் ஸ்தாபிக்க, அங்குள்ள கழக அங்கத்தினர்கள், S. ராதாகிருஷ்ணன், S/o N. V. சுகவனம், கலெக்டர், வேலூர் என்ற விலாசத்தில் சந்திக்கவும்.

ஈரோட்டில்: V. ராஜு, 237. அக்ரஹார வீதி, ஈரோடு.

கும்பகோணத்தில்: R பார்த்தசாரதி, 130. பெரிய தெரு, கும்பகோணம்.

கரூரில்: K. ராமசுப்பிரமணியன், 16. பெருமாள் கோயில் தெரு, கரூர்.

மோக்ஷகுளத்தில்: S. சந்திரசேகரன், உப்புமுத்தாம்பாளையம், மோக்ஷகுளம், P.O, வழி. வளவனூர்.

யாழ்ப்பாணத்தில்: வே. யோகநாதன், மாறன்குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

கோயம்புத்தூரிலுள்ள பெண் அங்கத்தினர்கள் கிளைக் கழகம் ஸ்தாபிக்க, K. அரவிந்தா, 71. சென்குப்தா வீதி, பிராமின் எக்ஸ்டன்ஷன், கோயம்புத்தூர் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

REG. No. M. 5542

ஆகஸ்ட் வெளியீடு

தெவிட்டாத நகைச்சுவை!
உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிகள்
ததும்பிய படம்....

விஜயாவின்

கல்யாணம் பண்ணிப்பார்

டைரக்ஷன்...ப்ரசாத்

தயாரிப்பு...
நாகிரெட்டி...சக்ரபாணி